Registered as a NewsPaper

பக்கங்கள் 06

விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM — Peoples Daily — மக்கள் தினசரி

நாதம்: 03 — திருவள்ளுவர் ஆண்டு 2023 — சித்திரை 01 — (13 - 04 - 1992) — திங்கட்கிழமை — ஓசை: 55

## கல்வித் திணைக்களத்திற்கு 94 எழுது வினைஞர்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ். கல்வித்திணைக்களத்திற்கு மட்டும் சுமார் 94 தற்காலிக எழுதுவினைஞர்கள் நியமிக்கப்பட உள்ளனர். தற்காலிக எழுதுவினைஞர்களைத தெரிவு செய்வதற்காக நடாத்தப்பட்ட போட்டிப் பரீட்சையின் மூலம் தெரிவு செய்யப்பட்டவர்களே இவ்வாறு யாழ் கல்வித் திணைக்களத்திற்கு நியமிக்கப்பட உள்ளனர். இவர்களுக்கான நியமனக்கடிதங்கள் மிகவிரைவில் அனுப்பி வைக்கப்பட இருப்பதாகத் தெரியவருகிறது.

(ஐ)

# ராணுவ உயர் பீட முரண்பாடு சிறிலங்கா அரசாங்கம்பதற்றம்




## கைதானோர் பெயர்பட்டியல் வழங்க ராணுவம் இணக்கம்

(கொழும்பு)

சிறிலங்கா இராணுவ நடவடிக்கைகளின் போது இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டு தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருக்கும் மற்றுமொரு தொகுதி தமிழ் மக்களது பெயர்ப்பட்டியலை வெளியிடுவதற்கு சிறிலங்காவின் கூட்டுப் படைகளின் தலைமை அலுவலகம் இணக்கம் தெரிவித்திருக்கிறது.

கொழும்பு சென்றிருந்த யாழ். அரசாங்க அதிபர் தடுத்துவைக்கப்பட்டிருப்போர் பற்றி கூட்டுப்படைகளின் தலைமை அலுவலக அதிகாரிகளுடன் நடத்திய உரையாடலின் போதே இவ் இணக்கம் தெரிவிக்கப்பட்டது

தொடர்ந்து தடுத்து வைக்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளுக்கு எதிரான யுத்தம் பாதிக்கப்படலாம் என அச்சம்

(கொழும்பு)

இராணுவ தளபதிகள் மத்தியில் எழுந்துள்ள கருத்து முரண்பாடுகளும் அதிகாரப் போட்டியும் பிரேமதாசா அரசாங்கத்திற்கு பெரும் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. இந்த நெருக்கடி நிலை நீடித்தால் இராணுவ கட்டுப்பாடு சீர்குலைந்து வடக்கு, கிழக்கில் விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தம் பெரும் பாதிப்படையலாமென அரச வட்டாரங்களில் கவலையும் அச்சமும் ஏற்பட்டுள்ளது. இராணுவ தலைமைப் பீடத்தில் தோன்றியுள்ள இந்த முரண்பாடு சிறிலங்கா இராணுவ இயந்திரத்தை பலவீனப்படுத்தலாம் என பி. பி. ஸி. செய்தி முகவர் கருத்துத் தெரிவித்தார்.

பிரேமதாசா அரசாங்கம் கட்டாய லீவிலிருக்கும் பிரதிப் பொலிஸ்மா அதிபர் உடுகம்பொல எழுப்பியுள்ள குற்றச்சாட்டுக்களினால் தென்னிலங்கையில், பெரும் அரசியல் நெருக்கடியில் அரசாங்கம் சிக்கியுள்ளது இந்நிலையில் தற்பொழுதுஇராணுவதலைமைப் பீடத்திற்குள் எழுந்துள்ள கருத்து மோதல்களினால்பெரி

(6ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்கு அகதி முகாமில் மக்கள் பெருமளவில் கைது

(திருக்கோணமலை)

திருக்கோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை பகுதிகளில் அகதிமுகாம்களில் தங்கியிருந்த தமிழ் மக்கள் சிறிலங்கா இராணுவத்தினரால் பிடித்துச் செல்லப்பட்டு கடும் சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டு வருகின்றனர்.

கடந்த வெள்ளியன்று ஆரம்பிக்கப்பட்ட பாரிய இராணுவ நடவடிக்கையின் போதே முகாம்களில் தங்கியிருந்த தமிழர்கள் பிடித்துச்செல்லப் பட்டுள்ளனர்.

## குண்டு வெடிப்பிற்கும் எமக்கும் தொடர்பில்லை

### - சோமவன்ச அமரசிங்கா

(கொழும்பு)

மஹரகம குண்டுவெடிப்பிற்கும் ஜே வி. பி. இயக்கத்திற்கும் எவ்வித தொடர்பும் இல்லையென தற்போதைய ஜே.வி பி. தலைவர் சோமவன்ச அமரசிங்கா தெரிவித்தார்.

எங்களுடைய செயற் திட்டங்களை சிறிலங்காவிலும், சர்வதேச ரீதியாகவும் விஸ்தரித்துள்ளோம். குண்டு வெடிப்புளில் நாம் விஸ்தரிப்பதில்லை. எமது கொள்கைகள் தொடர்பாக தேர்தல் ஆணையாளருக்கு நாம்எழுதினோம். இது தொடர்பான பதில் இன்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## கொலைக் குழுவினருக்கே பொலிஸில் பதவி உயர்வு

(கொழும்பு)

கட்டாய விடுமுறையிலிருக்கும் பிரதிப் பொலிஸ்மா அதிபர் திடீரென்று பகிரங்க அறிக்கையை வெளியிட்டதை அடுத்துப் பொலிஸ் சேவையில் உள்ள அண்மைக்கால ஊழல்களும் வெளிவரத் தொடங்கியுள்ளன.

1989, 1990 ஆம் ஆண்டுகளில் பொலிஸ் சேவையில் பதவி உயர்வு வழங்கப்பட்டவர்களில் பலர் அரசின் கொலைக் குழுவில் இணைந்து செயற்பட்டவர்கள் என்று தெரிவிக்கப்படுகிறது. இவர்களுக்குப் பதவி உயர்வு வழங்குவதற்கு எந்த தகைமையும் இல்லை இந்த அடிப்படையில் போனால் குற்றவாளிகள்தன் பொலிஸில் இருப்பார்கள் என்று தனது பெயரை வெளியிட விரும்பாத உயர்பொலிஸ் அதிகாரி தெரிவித்தார்.

## அகதிகள் கப்பலில் ஈ. பி. டி. பி, டெலோ

(திருக்கோணமலை)

தமிழகத்திலிருந்து கடந்த வியாழக்கிழமை திருமலைக்கு

படுகிறது.

இவர்களில் ஈ.பி.டி.பியினர் கப்பல்மூலம்யாழ்ப்பாணத்திற்

## 1989க்கு முன்னைய நிலையை நினைவூட்டும் குண்டு வெடிப்பு

(கொழும்பு)

சமீபத்தில் அம்பாறையிலும்

உரையாற்றும்போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ளின் வாழ்வை ஸ்தம்பித நிலையை அடைந்தது

## போராளிகள் ஊடுருவலைத் தடுக்க

(திருக்கோணமலை)

தமிழகத்திலிருந்து கடந்த வியாழக்கிழமை திருமலைக்கு அகதிகளை ஏற்றிவந்த கப்பலில் 60 ஈ.பி.டி.பி யினரும் 125 டெலோவினரும் வந்து சேர்ந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இவர்களில் ஈ.பி.டி.பியினர் கப்பல்மூலம்யாழ்ப்பாணத்திற்கும், டெலோவினர் மட்டக்களப்பிற்கும் கொண்டு செல்லப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கொழும்பில் புலிகளின் வெடிகுண்டு நிபுணராம்

(கொழும்பு)

புலிகளின் குண்டு நிபுணர் எனப்படும் றூபன் கொழும்பில் தங்கியிருப்பதாக தேசிய புலனாய்வு பணியகம் எச்சரித்துள்ளது. மட்டக்களப்பு பிரிவின் முக்கியஸ்தரும், குண்டு வெடிப்பு நிபுணருமான றூபன் கொழும்பில் தங்கியிருப்பதாகவும் இதனால் எச்சரிக்கையாக இருக்கும்படி ஏனைய தமிழ்க் குழுக்களைத் தேசிய புலனாய்வு பணியகம் கேட்டுக்கொண்டுள்ளது.

## தென் தமிழீழத்தில் பாரிய ராணுவ நடவடிக்கை

(திருக்கோணமலை)

தென்தமிழீழத்தில் கடந்த வெள்ளி தொடக்கம் பாரிய இராணுவ நடவடிக்கைகள் ஆரம்பமாகியுள்ளன. மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களிலுள்ள குடுமியாமலை, செவன்மலை, பெரியவெட்டுவான், ஓட்டமாவடி, செங்கலடி பகுதிகளில் ஆயிரத்திற்குமேற்பட்ட சிறிலங்கா இராணுவத்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## தியாகச்சுடர் அன்னைபூபதி நினைவு நிகழ்வுகள்

கைதடி வட்டவைப் பிரிவில் கைதடி விக்கினேஸ்வரா வித்தியாலயத்தில் இன்று தியாகச்சுடர் அன்னை பூபதி நினைவாக அடையாள உண்ணாவிரதமும் நினைவஞ்சலிக் கூட்டமும் நடைபெற உள்ளன.

அடையாள உண்ணா விரதம் இன்று காலை 8.00 மணி முதல்பிற்பகல் 4.00 மணிவரை இடம் பெறும்.

நினைவஞ்சலிக் கூட்டம் பிற்பகல் 7.00 மணிக்கு ஆரம்பமாகும். இந்நினைவஞ்சலிக் கூட்டத்தில் நலன்கிள்ளி, பரா, இளநிலா ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றுவர்.

இதனைத் தொடர்ந்து கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறவுள்ளன.

(கொழும்பு)

சமீபத்தில் அம்பாறையிலும் மகரகமவிலும் நடைபெற்ற சம்பவங்கள் 1989 ஆம் ஆண்டிற்கு முன்பிருந்த பீதி நிலைமையை எமக்கு நினைவூட்டுகிறது என் சிறிலங்கா ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசா தெரிவித்துள்ளார். 'சரசவிய' சஞ்சிகையின் 30 ஆண்டைக் குறிக்கும்முகமாக இடம்பெற்ற விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும்போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஒரு நாட்டில் வன்செயல்கள் இடம்பெற்றால் அது சகல தரப்பினரையும் பாதிக்கும் பாதிப்பு ஒரு துறைக்கு மட்டும் மட்டுப் படுத்தப்படுவதில்லை. 1989 இல் கலைத்துறை செயலற்றுப் போயிருந்தது பல திறமை மிக்க கலைஞர்களை இழந்தோம் நாட்டின் மக்களின் வாழ்வே ஸ்தம்பித நிலையை அடைந்தது

தீவிரவாதத்தின் மூலகாரணங்களைக் கண்டறிய நாம் தீவிர முயற்சிகளை மேற்கொண்டோம். இதன் மூலம் இப்போதைய நிலைக்குத்தீர்வு காணும் நிலையில் நாம் இருக்கின்றோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன் என மேலும் அவர் தெரிவித்தார்.

## டென்சில் கொப்பேகடுவாவை மாற்றும் திட்டம் எதுவுமில்லை

(கொழும்பு)

ஜெனரல் டென்சில் கொப்பேகடுவாவை வடமத்திய மாகாணத்திற்கு மாற்றுவதற்கான திட்டம் எதுவுமில்லை. அவர் தொடர்ந்தும் இராணுவத்தின் இரண்டாவது பிரிவுக்குத் தளபதியாகக் கடமை புரிந்து வருகிறார். இராணுவத் தளபதியிடமிருந்து கட்டளைகளை ஏற்றுச்செயற்படுத்துகிறார் என்று இராணுவப் பேச்சாளர் கேணல் சரத் முனசிங்கா வாராந்தச் செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

இராணுவ அமைப்பில் ஏற்படுத்தப்பட்டுள்ள மாற்றங்கள் குறித்து ஜனாதிபதியின் சர்வதேச விவகார ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன் கூறுகையில், முப்படைகளின் தளபதிகளும், பொலிஸ்மா அதிபரும் கூட்டாக இராணுவ நடவடிக்கைகள்பற்றி திட்டம் வகுத்துச் செயற்படுத்தலாம் என்றார். முன்பெல்லாம் கூட்டுப்படை நடவடிக்கைத் தலைமைச்செயலகத்திலிருந்து

(6ஆம் பக்கம் பார்க்க)

## காரைநகர் படைத் தளத்திற்கு இந்.பாதுகாப்பு துறை அதிகாரி

(கொழும்பு)

இந்தியப் பாதுகாப்புச் சேவைகள் ஆலோசகர் ஒருவர் அண்மையில் காரைநகர் கடற்படைத் தளத்திற்கு விஜயம் செய்துள்ளார்.

இது தொடர்பாக இந்தியத் தூதுவரகம் கொழும்பில் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது. இலங்கைக் கடற்படைத் தளபதி சாதாரணமாக கடற்படை நடவடிக்கைகள் பற்றி அறிந்து கொள்வதற்காக இந்தியப் பாதுகாப்புச் சேவை ஆலோசகரை அதிதியாக இத்தளத்திற்கு எடுத்துச் சென்றனர். இவர் எந்தக் கட்டத்திலும் பத்திரிகையாளர்களைச் சந்திக்கவில்லை எனவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

போராளிகள் ஊடுருவலைத் தடுக்க

## தமிழகக் கரையோரத்தில் பொலிஸ் படை அவசியம்

### — பிரபாகர்

(டில்லி)

தமிழ் நாட்டிற்குள் இலங்கைத்தமிழ் போராளிகள் ஊடுருவுதலைக் கட்டுப்படுத்துவதற்கு கடலோரப் பொலிஸ் படையை அமைக்கவேண்டும் என்றுஇந்தியக் கடற்படையின் சிறப்புப் பிரிவுத் தலைமை அதிகாரி வைஸ் அட்மிரல் வி.எஸ். பிரபாகர் யோசனை கூறியுள்ளார்.

கோடியக்கரை, வேதாரணியம் ஆகிய இடங்களிலுள்ள கப்பற்படைப் பிரிவுகளைப் பார்வையிட்டபின் நேற்றுமுன்தினம் செய்தியாளரிடம்பேசிய அவர், நாட்டின் கடற்படையும், கடலோரக் காவற் படையும் ஆழ்கடல்பகுதியில் ரோந்து செல்வதற்கான கருவிகளையும், கப்பல்களையும் மட்டுமே கொண்டிருப்பதால், இத்தகையை கடலோரப் பொலிஸ் படை போராளிகளைத் திறம்பட ஒடுக்குவதற்கு அவசியம் என்றார்.

கடற்படை தனது பெரிய

(6 ஆம் பக்கம் பார்க்க)

இனப்பிரச்சினை;

## சம்பந்தப்பட்டவர்கள் புலிகளும்-அரசாங்கமுமே

### -பிரிட்டன்தூதுவர்

(கொழும்பு)

தமிழர்கள் பிரச்சினையில் சம்பந்தப்பட்டோர் விடுதலைப் புலிகளும் சிறிலங்கா அரசுமேயாகும். இப் பிரச்சினையை தீர்ப்பதற்கு அவர்கள் இருவருமே முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என இலங்கைக்கான பிரிட்டன் தூதுவர் எட்வர்ட் கோன்சின் தெரிவித்துள்ளார்.

கண்டியில் மல்வத்த மகாநாயகதேரோ-ரம்புக்வல விபசிதேரோவை சந்தித்த பிரிட்டிஸ் தூதுவர் இவ்வாறு தெரிவித்தார்.

தமிழர்களின் ஒரே பிரதிநிதிகள் விடுதலைப் புலிகளே என தூதர் மேலும் தெரிவித்தார்.

## கருத்தோவியம் திறப்பு

இன்று (13-4-92) காலை 9.00 மணிக்கு யாழ். சின்னக் கடைப் பகுதியில் கடற்புலிகளால் கருத்தோவியம் ஒன்று திறந்து வைக்கப் படுமெனத் தெரிவிக்கப்படுகின்றது.

கடற்புலிகளின் குருநகர் பிரதேசப் பொறுப்பாளர்திரு. சிவலிங்கம் கருத்தோவியத்தைத்திறந்துவைக்க உள்ளார்.

புத்தாண்டு பொலிவுடன் பிறந்து பொங்கும் வளங்களை வாழ்வில் சேர்க்கட்டுமென
வாழ்த்துக்களை வழங்கும்

நியூ லலிதா ஜுவல்லர்ஸ்

74/1 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

# "அந்நியனிடம் கையேந்தி நிற்கும் நிலையிலிருந்து மாற வேண்டும்"

-- தமிழ்மாறன்

"போராட்டத்தின் மூலம் தேச விடுதலையைப் பெறுவதோடு அந்நியனிடம் கையேந்தி நிற்கும் நிலையிலிருந்தும் நாம் மாற வேண்டும்" தமிழீழ ஆய்வு நிறுவனத்தின் அனுசரணையுடன் நடத்தப்படும் விவசாய பயிற்சி வகுப்பிலும் கால்நடை வைத்தியப் பயிற்சி வகுப்பிலும் பயிற்சி பெறும் பயிற்சியாளர்களுக்கான ஒன்றிணைந்த கலந்துரையாடலில் சிறப்புரையாற்றும் போது தமிழீழ அரசியல் பொறுப்பாளர் தமிழ்மாறன் (மூர்த்தி) இவ்வாறு தெரிவித்தார்.

இக் கலந்துரையாடல் யாழ்.பல்கலைக்கழக கிளிநொச்சி விவசாய பீடத்தில் கடந்த மாதம் நடைபெற்றது.

இக் கலந்துரையாடலில் தமிழ் மாறன் அவர்கள் மேலும் உரையாற்றுகையில், பயிற்சியாளர்கள் பயிற்சியினை முடித்து விட்டு வெறுமனே இருந்து விடாது மக்களுக்குப் பயன்படத்தக்க வகையில் பெற்றுக் கொண்ட பயிற்சியினை செயற்படுத்த வேண்டும். இம் மாவட்டத்தில் பல ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலம் தரிசாக விடப்பட்டுள்ளது. இவையனைத்தும் முழுமையாகப் பயன்படுத்தப்பட வேண்டியது அவசியம் எனக் குறிப்பிட்ட அவர் தமிழீழ ஆய்வு நிறுவனம் செயற்படத் தொடங்கிய பின் பெரும் அபிவிருத்திக்குரிய மாற்றங்களை அவதானிக்க முடிகிறது எனவும் தெரிவித்தார்.

தமிழீழ ஆய்வு நிறுவன வன்னி, கிளிநொச்சி பொறுப்பாளர்கள் வன்னி பிராந்திய தளபதி கெங்கா, வன்னிப் பிராந்திய அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் மனோ ஆகியோர் உட்பட மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

இக் கலந்துரையாடலின் போது கலந்து கொண்ட பயிற்சியாளர்களுக்கு விவசாயம், கால்நடை வளர்ப்பு, பராமரிப்பு சம்பந்தமான விளக்கங்கள் துறைசார்ந்த நிபுணர்களினால் அளிக்கப்பட்டன.


அனைவருக்கும் எமது

புதுவருட வாழ்த்துக்கள்!

கலக்சி புகைப்பட சேவை

337, 1ஆவது மாடி
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(2436)



ராஜா தொழிலகம்
புதுவருட வாழ்த்துக்கள்

நாடுகாக்க வேண்டும்
முடிந்தால் நன்மை செய்யவேண்டும்

வாடிக்கையாளர்கள், தொழிலாளப்பெருமக்கள், நண்பர்கள், அன்பர்கள், யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்க சக உறுப்பினர்கள்.
அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்துக்கள்

தரமான பேக்கரி உற்பத்திகளான
பாண் மற்றும் கொக்கோ கிறீம், லெமன் கிறீம் மற்றும் சுதேசிய பிஸ்கட் வகைகள், இவைகளுக்கு நாடவேண்டிய நம்பிக்கையான ஸ்தாபனம்
நெல்லை மாநகரில்

உற்பத்தி நிலையம்'
ராஜா தொழிலகம்
"ஐடியல்"
துருபதராஸ் வீதி,
நெல்லியடி.

சுதர்ஸனம்
யாழ்.வீதி, 37-B
நெல்லியடி.

(2443)


## சீனி விநியோகம்

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினால் யாழ். செயலகத்தில் இருந்து கொள்வனவு செய்யப்பட்ட சீனி எமது சங்கத்தின் சகல உலர் உணவு அட்டைகளுக்கும் 2 கிலோ வீதம் வழங்கப்படும். 1 கிலோவின் விலைரூ26.50 ஆகும் என ஊர்காவற்றுறை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் அறிவித்துள்ளது.

# வவுனியா பாடசாலைகளில் ராணுவம்பெருமளவில்குவிப்பு

(வவுனியா)

பாடசாலை லீவு காலத்தில் வவுனியா நகரில் அமைந்துள்ள தமிழ், முஸ்லிம் பாடசாலைகளில் சிறிலங்கா இராணுவத்தினர் முகாமிடத் தொடங்கியுள்ளனர்.

பெரும் தொகையான இராணுவத்தினர் ஆயுத தளபாடங்களுடன் இப்பாடசாலைகளில் குவிக்கப்பட்டு வருகின்றனர்.

சமீபத்தில்-துப்பரவு செய்யப்பட்டு மீண்டும் ஆரம்பிக்கப்படவிருந்த பட்டாணிச்சி புளியங்குளம் பகுதியில் உள்ள முஸ்லிம் பாடசாலையில் நூற்றுக்கணக்கான இராணுவத்தினர் குவிக்கப்பட்டுள்ளனர்.

வடபகுதியில் பெரும் இராணுவ நடவடிக்கை ஒன்றை மேற்கொள்வதற்கு வசதியாக இந்த இராணுவத்தினர் குவிக்கப்பட்டு வருகின்றனர் என்று அறியப்படுகிறது. [தி]

## தேயிலை ஏற்றுமதி இஸ். நாடுகளுடன்பேச்சு

(கொழும்பு)

தேயிலை ஏற்றுமதி பற்றி ஆராய பாகிஸ்தான், சவூதி அரேபியா, சிரியா ஆகிய நாடுகளுக்கு சிறிலங்காவின் தூதுக்குழு ஒன்று செல்கின்றது. பாகிஸ்தான், சவூதிஅரேபியா ஆகிய நாடுகளுக்கான தேயிலை ஏற்றுமதியை அதிகரிப்பதற்கான வாய்ப்புகள் பற்றி ஆராய பெருந்தோட்ட தொழில்துறை அமைச்சர் ரூ'பா கருணாதிலக தலைமையிலான குழுவொன்று அந்நாடுகளுக்கு புறப்பட்டுச் செல்லவுள்ளது. இத் தூதுக்குழுவில் தோட்டத் தொழில்துறை அமைச்சின் செயலாளர், இலங்கைத் தேயிலை சபையின் பணிப்பாளர் மற்றும் செயலாளர் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

## முடிவுத்திகதி நீடிப்பு

தமிழீழ ஆய்வு நிறுவனத்தின் சமூக, பொருளாதார, விஞ்ஞான ஆய்வு இதழான ஆதாரம் 6வது இதழில் (தை-மாசி1992) வெளியான குறுக்கெழுத்துப் போட்டி வாசகர்களின் வேண்டுகோளிற்கு இணங்க, 31.03 92 இருந்து, 30.04.92வரை நீடிக்கப்பட்டுள்ளதாக தமிழீழ ஆய்வு நிறுவனத்தினர் அறிவித்துள்ளனர்.

## மகோற்சவம்

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் தில்லையம்பதி அருளமிகு சிவகாமி அம்பாள் திருக்கோயில் மகோற்சவம் மே மாதம் 7 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது. 15 ஆம் திகதி தேர்த் திருவிழாவும், 16, 17 ஆம் திகதிகளில் தீர்த்தம், பூங்காவன திருவிழாக்களும் இடம்பெறும்.

## நினைவு கூருகின்றோம்...

**1992. 04. 13**

1985 ஆம் ஆண்டு இதே தினத்தில் திருக்கோணமலை, கும்புறுப்பிட்டிப்பகுதியில் சிறிலங்கா கடற்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது வீரச்சாவெய்திய -

**குலம்** (வீரக்குட்டி சந்திரமோகன் - இருதயபுரம், மட்டக்களப்பு.)

1987 ஆம் ஆண்டு மட்டக்களப்பு, கல்குடாச் சந்தியில் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போது காயமுற்ற நிலையில் தனது கைக்குண்டை வயிற்றில் வெடிக்க வைத்து வீரச்சாவெய்திய -

**சுதர்சன்** (கிருஸ்ணபிள்ளை கிருஸ்ணகுமார் - பேத்தாளை, மட்டக்களப்பு)

1988 ஆம் ஆண்டு புதுக்குடியிருப்பில் தேச விரோத சக்திகள் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய -

**ஈஸ்வரன்** (தம்பிராசா ஆழ்வாப்போடி - புதுக்குடியிருப்பு - 5)

1989 ஆண்டு மட்டக்களப்பு - கல்குடாப் பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய -

**குமார்** (கிருஸ்ணபிள்ளை கிருஸ்ணகுமார் - கல்குடா, மட்டக்களப்பு.)

தென்மராட்சியில் இந்திய இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிச்சூட்டில் வீரச்சாவெய்திய -

★ **ஜீவா** (சின்னத்துரை இந்திரன் -மீனாட்சி அம்மன் கோயிலடி, சங்கத்தானை, சாவகச்சேரி.)

1991 ஆம் ஆண்டு ஆனையிறவில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட வெடி விபத்தில் எம்மைப் பிரிந்த -

**வள்ளல்**

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

★ மேற்குறிப்பிட்ட மாவீரர் ஜீவா ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவார்.

**விடுதலைப் புலிகள்**
**மக்கள் முன்னணி**

(சி/4257)

## இந்தியாவில் தங்கியிருக்கும்

# இலங்கை இந். வம்சாவளியினர்மீது கெடுபிடிகளைத் தவிர்க்க கோரிக்கை

(கொழும்பு)

தமிழகத்தில் இருக்கும் இந்திய வம்சாவளியினர் மீது கெடுபிடிகளைத் தவிர்க்கும்படி இந்தியப் பிரதமர் நரசிம்மராவிடம் இ.தொ.கா. தலைவரும் அமைச்சருமான தொண்டமான் கோரிக்கை விடுத்துள்ளார்.

இலங்கையிலிருந்து தமிழகம் சென்று அங்கு தற்காலிகமாகத் தங்கியிருக்கும் இந்திய வம்சாவளியினர் விசேட தரத்தினராகக் கணிக்கப்பட வேண்டுமென தொண்டமான் இந்தியப் பிரதமரிடம் கோரியுள்ளார். பிரதமர் ராவுக்கு அவர் அனுப்பியுள்ள கடிதம் ஒன்றில், இதனைத் தெரிவித்துள்ளார். அத்துடன் அக் கடிதத்தின் பிரதியொன்று தமிழக முதல்வருக்கும் அனுப்பப்பட்டுள்ளது.

## இரு பொலிஸார் பதவி நீக்கம்

(கொழும்பு

சூரியவெவ பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த இரு பொலி


புதுயுக
புத்தாண்டு வாழ்த்துக்கள்

அச்சடித்தல் தொழிலிற்கு
புது மெருகு ஊட்டுபவர்கள்

நியூ ஈரா அச்சகம்

267, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.


## மீண்டும் பாடுநிலா இசைக்குழு

மீண்டும் பாடுநிலா இசைக்குழு

(புதிய வார்ப்புகளுடன்)

தங்கள் புத்தாண்டுவாழ்த்துக்களை தமிழீழ ரசிகர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறார்கள்

நிகழ்ச்சிகளைச் சிறப்பிக்க இன்றே தொடர்பு கொள்ளுங்கள்.

## "பாடுநிலா"

பல முத்துக்கு முத்தான கலைஞர்கள் கலந்து கொள்ளும் அமுதகான இசைவிருந்து

தொடர்புகளுக்கு:

**யோ. வின்ரோ மகேந்திரா**
**17, கோவில் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

(2441)



அமைதியும்
சுபீட்சமும் நிலவ
ஆங்கீரச வருடம்
வழி செய்யட்டும்

உள்ளூர் உற்பத்திகளை வாங்குவோம் — பாவிப்போம் என்ற திட சித்தத்துடன் புத்தாண்டை ஆரம்பிப்போம் சுடர் விளக்காயினும் தூண்ட கோல் ஒன்று வேண்டு மல்லவா?

மில்க்வைற் சலவைத்தூள்,
மில்க்வைற் நீல சோப்,

நேரத்தை மிச்சப்படுத்துகிறது
பணத்தைச் சேமிக்கிறது
சிறந்த சலவையைத் தருகிறது

மேலுறைகள், வெற்றுப்பக்கற்றுகள், அரிய அன்பளிப்புக்களைப் பெற்றுத் தருகின்றன.

**மில்க்வைற் — யாழ்ப்பாணம்**

(சி/4247)


சூரியவெவ பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த இரு பொலிஸார் பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். இது பற்றித் தெரியவருவதாவது, பணம் படைத்த இரத்தினக்கல் வியாபாரி ஒருவரது மகன் உட்பட பன்னிரண்டு பேர் கொண்ட கும்பலொன்றின் நடவடிக்கையைத் தொடர்ந்து பிரபல இரத்தினக்கல் வியாபாரியின் மகன் கைது செய்யப்பட்டதுடன் இரண்டு வாகனங்களும் பொலிஸாரால் தடுத்து வைக்கப்பட்டன. சரித்திரப் பிரசித்தி வாய்ந்த எம்பிலிப்பிட்டியப் பகுதியில் அருஞ்செல்வங்களைத் திருடுபவர்களான இவர்களைப் பிடிக்கப் பொலிஸார் முயற்சித்த வேளையில் கைது செய்யப்பட்டவரான இரத்தினக்கல் வியாபாரியின் மகனை விடுவித்த பொலிஸார் பதவி இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளனர்.

## இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் வட்டவையினால் கோப்பாய்ச் சந்தி, கந்தசாமி கோவிலடியில் வரும் 15 ஆம் திகதி நடைபெறவிருந்த அன்னைபூபதி நினைவுதின அடையாள உண்ணாவிரதமும், நினைவஞ்சலிக் கூட்டமும் உரும்பராய் சைவத் தமிழ் வித்தியாசாலையில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இக்கூட்டத்தில் இளையவன், கவிஞர் வாஞ்சிநாதன், சுடர் ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றவுள்ளனர்.

இதனைத் தொடர்ந்து இடம் பெறும் கலைநிகழ்ச்சிகளில் சின்னமணி இசைக்குழுவினரின் வில்லிசை நிகழ்ச்சியும் இடம் பெறவுள்ளது.

## திறப்பு விழா

(கொழும்புத்துறை)

நல்லூர் பிரதேச வர்த்தகச் சங்கத்தின் பணிமனை திருநெல்வேலி சந்தி பலாலி வீதியுலுள்ள மாடிக் கட்டிடத்தில் மங்கள விளக்கேற்றித் திறந்து வைக்கப்பட்டது. (24)


செங்கள மாடிடும் வேங்கைகள் வீரத்தால்
சிங்களம் என்பதே திசைகெட்டுச் சாய
பொங்கும் மங்களம் தங்கிட
ஆங்கீரச ஆண்டே எழுந்து வா



## இல்லத்தரசிகளே!

உங்களுக்குத் தேவையான
சகல மரக்கறி வகைகளையும்,
சமையல் பொருள்களையும்
நியாய விலைக்குப் பெற்றுக்கொள்ள
நாடுங்கள் பசுஞ்சோலை
நியாய விலை மரக்கறிக் கடை

## பசுஞ்சோலை

**மின்நிலைய வீதி** (சுவையருவிக்கு அருகாமையில்) **யாழ்ப்பாணம்**

(சி-4249)

யாழ்ப்பாணம்

## வடக்குக் கிழக்குப் பிரதேசம் ஓர் அறிமுகம்

ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட வடக்கு, கிழக்கு பிரதேசங்கள் என்பது இலங்கைத் தீவின் வட பகுதியிலும் கிழக்குப் பகுதியிலும் பரந்துள்ளன. இவ் வடக்கு கிழக்குப் பிரதேசங்களின் மொத்த நிலப்பரப்பு 18, 323 சதுர கிலோ மீற்றராகும். இவ்வடக்கு, கிழக்குப் பிரதேசங்களில் உள்ள பெரிய உள்நாட்டு நீர்ப்பரப்பு 558 சதுர மீற்றராகும். எனவே வடக்கு, கிழக்குப் பிரதேசங்களில் மொத்தப் பரப்பளவு 18, 887 சதுர கிலோ மீற்றர் ஆகும். இது இலங்கைத் தீவின் மொத்தப் பரப்பளவில் 28. 8 சத வீதமாகும். இப்பிரதேசம் முழுவதும் வரண்ட வலயமாகவே கருதப்படுகின்றது. இவ் வடக்கு, கிழக்குப் பிரதேசங்கள் நிர்வாக ரீதியாக 8 மாவட்டங்களைக் கொண்டுள்ளன.

1, வட மாகாணம்.
- (அ) யாழ்ப்பாணம்.
- (ஆ) கிளிநொச்சி
- (இ) வவுனியா.
- (ஈ) மன்னார்.
- (உ) முல்லைத்தீவு.

2, கிழக்கு மாகாணம்.
- (அ) மட்டக்களப்பு.
- (ஆ) அம்பாறை.
- (இ) திருக்கோணமலை.

1881 ஆம் ஆண்டுக் குடிசன மதிப்பீட்டின் படி வடக்கு கிழக்குப் பிரதேசங்களின் மொத்தச் சனத்தொகை 4, 30,055 பேராகும். 1981 ஆம் ஆண்டு குடிசன மதிப்பீட்டின் படி மொத்தச் சனத்தொகை 2, 084, 655 பேராகும். வடக்குக் கிழக்குப் பிரதேசங்களின் சனத்தொகையின் இனரீதியான அமைப்பினை பின்வரும் அட்டவணை காட்டுகின்றது

| இனம் | 1881 | 1881 | 1981 | 1981 |
|---|---|---|---|---|
| | தொகை | சதவீதம் | தொகை | சதவீதப் |
| இலங்கைத் தமிழர் | 364889 | 84.9 | 1356546 | 65. |
| முஸ்லிம்கள் | 53417 | 12.4 | 366267 | 17 ·6 |
| இந்தியத் தமிழர் | — | — | 74616 | 3.6 |
| சிங்களவர் | 7326 | 1.7 | 278829 | 13.4 |
| ஏனையோர் | 4423 | 1.0 | 8397 | 0.3 |
| வட, கிழக்கு பிரதேசம் | 430055 | 100.0 | 2084655 | 100 0 |

1881 ஆம் ஆண்டுக் குடிசன மதிப்பீட்டின்படி இந்தியத் தமிழர் தொகை இலங்கைத் தமிழர் தொகைக்குள் அடங்கி உள்ளது.

# தமிழீழ மண்ணில் சிங்களக் குடியேற்றங்கள்

## -ஒரு நோக்கு

வடக்கு கிழக்குப் பிரதேசங்களைப் பொறுத்தவரையில் கிழக்கு மாகாணத்திலேயே

முதன் முதலில் அதிகளவில் குடியேற்றத் திட்டங்கள்நடைமுறைப்படுத்தப்பட்டன. இவ் வகையில் 1949 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட கல்லோயா ஆற்றுப் பள்ளத்தாக்கு அபிவிருத்தித் திட்டமே, முதலில் ஆரம்பிக்கப்பட்ட பாரிய குடியேற்றத் திட்டமாகும், பட்டிப்பளை என்ற பாரம் பரிய தமிழ் பெயரைக் கொண்ட பிரதேசம், கல்லோயா என்று பெயர் சூட்டப்பட்டு 1949 ஆம் ஆண்டு கல்லோயா ஆற்றுப் பள்ளத்தாக்கு அபிவிருத்தித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இத்திட்டத்தின் எதிர்பார்ப்புக்களாக பின்வருவன அமைந்திருந்தன.

1. இத் திட்டத்தின் நீர் வடிகாலமைப்பின் கீழ் 855 சதுரகிலோ மீற்றர் (330 சதுர கிலோ மைல்) பரப்பளவு பிரதேசம் வரும்.
2. 48, 600 ஹெக்டேயர் (1,20 000 ஏக்கர்) நிலப் பரப்பு நீர்ப்பாசன வசதியைப் பெறும்
3. 9, 000 கிலோ வாட்ஸ் மின்சக்தி உற்பத்தி செய்யப்படும்.
4. 30, 000 பேருக்கு குடி நீர் வசதி கிடைக்கும்.
5. 200 000 பேர் குடியமர்த்தப்படுவார்கள்.

மேலே கூறப்பட்ட பாரிய எதிர்பார்ப்புகளுடன் அப்போது இலங்கையின் பிரதம மந்திரியாக இருந்த திரு டி. எஸ். சேனநாயக்கா 1949 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 28 ஆம் திகதி, இங்கினியாகலையில் கல்லோயாத் திட்டத்தினை ஆரம்பித்து வைத்தார்.

ஆனால் இத்திட்டத்தின் செயற்பாடுகள் அதன் அபிவிருத்தி நோக்கத்தினை அடையக் கூடியனவாக இருக்கவில்லை நீர் வடிகாலமைப்புக்கு ஒரு சரியான திட்டம் கல்லோயா ஆற்றுப்பள்ளத்தாக்கு அபிவிருத்தித் திட்டத்திலிருக்கவில்லை. மேலும் இத்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட நிலத்தின் அளவு பரந்த பயிர்ச்செய்கையினை மேற்கொள்வதற்கு மிகவும் சிறியதாக இருந்தது அதே நேரத்தில் செறிவான பயிர்ச்செய்கையினை மேற்கொள்வதற்கு இந் நிலத்தின் அளவு மிகவும் பெரிதாக இருந்தது (Ceylon

2

*Economist vol 2 No. I Sept 1951 P.69-76*

மேலும் 1970 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டகல்லோயாத் திட்ட மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கை, இத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பெருந்தொகைச் செலவீடு எதுவித நன்மையையும் பெற்றுத்தரவில்லை என்பதனைச் சுட்டிக்காட்டியது கல்லோயா ஆற்றுப் பள்ளத்தாக்கு அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் வீடுகள் கட்டடங்கள் என்பவற்றை உருவாக்குவதற்கு 40 மில்லியன் ரூபா செலவிடப்பட்டது. அதே நேரத்தில் இத் திட்டத்தின் அணைக்கட்டினைக் கட்டுவதற்கு 40 மில்லியன் ரூபாவிற்கு மேல் செல

கல்லோயாப் பிரதேசத்தில் உள் கட்டுமான வேலைகளுக்கு மட்டும் 320 மில்லியன் ரூபா செலவிடப்பட்டது. (1960 - 1966) எனவே இப் பிரதேசத்தில் மக்களைக் குடியமர்த்துவதற்குத்தேவையான அம்சங்களிலேயே அரசாங்கம் கூடுதலான கவனத்தைச் செலுத்தியது. அதற்காகவே பெருந்தொகைப் பணத்தினையும் செலவிட்டது. உற்பத்திப் பெருக்கம், விவசாய அபிவிருத்தி போன்ற பொருளாதார ரீதியான அம்சங்களில் அரசாங்கம் அதிகளவு அக்கறை செலுத்தவில்லை. இதன் அடிப்படையில் ஏற்கனவே நடைமுறையில் இருக்கும் திட்டங்களை அபிவிருத்தி செய்வதற்கும் திட்டங்களைப் பலப்படுத்துவதற்கும் பதிலாக கல்லோயாத் திட்டம் போன்ற பெருமளவு செலவினைக் கொண்ட திட்டங்களில்அருமையாகவுள்ள தனது வளங்களை அரசாங்கம் ஏன் பயன்படுத்தியது? என்ற வினாவினை கல்லோயா திட்டமதிப்பீட்டுக் குழு எழுப்பியது. அவ்வாறாயின் கல்லோயாத் திட்டத்தின் மூலம் அரசாங்கம் சாதித்தது என்ன?

உண்மையில் கல்லோயா ஆற்றுப்பள்ளத்தாக்கு அபிவிருத்தித் திட்டத்தினை அரசாங்கம் ஒரு சிங்களக் குடியேற்றத் திட்டமாகவே நடைமுறைப்படுத்தியது. இதன் முதற்கட்டமாகவே பட்டிப்பளை என்ற பாரம்பரிய தமிழ்ப் பிரதேசம் கல்லோயா என்ற சிங்களப்பெயர்கொண்ட பிரதேசமாக மாற்றப்பட்டது. இக் குடியேற்றத் திட்டத்தின் கீழ் 44 குடியேற்றக் கிராமங்கள் அமைக்கப்பட்டன. இதில் 38 கிராமங்கள்சிங்களக் கிராமங்களாகும் மிகுதி 6கிராமங்கள் மட்டுமே தமிழ் மக்களுக்குரியதாக இருந்தன. மேலும் இத் தமிழ்க் கிராமங்கள் நீர்ப்பாசன வசதியற்றவை அல்லது சிங்களக் கிராமங்களினூடாகச் செல்கின்ற நீர்ப்பாசன வசதிகளை உடையனவாகக் காணப்பட்டன. கல்லோயாக் குடியேற்றத் திட்டத்திலுள்ள இங்கினியாகல என்ற இடத்தில் 1956 ஆம் ஆண்டு ஆனிமாதம் 5ஆம்திகதி நடைபெற்ற இனக்கலவரத்தின்போதும் மீண்டும் 1958 ஆம் ஆண்டு வைகாசி மாதம் நடைபெற்ற இனக்கல

கிராமங்களில் குடியேறியிருந்த தமிழ் மக்கள் கொல்லப்பட்டனர்; துரத்தியடிக்கப்பட்டனர். இதனைத் தொடர்ந்து இக் கிராமங்களிலும் சிங்களக் குடும்பங்கள் குடியேறினர். இதன் விளைவாக இது ஒரு பூரணமான சிங்களக் குடியேற்றத் திட்டமாக மாறியது.

கல்லோயா ஆற்றுப்பள்ளத்தாக்கு அபிவிருத்தித்திட்ட வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருந்த காலத்தில் ஏற்பட்டதாகக் கூறப்படும் ஒரு நிகழ்ச்சி மூலம் இத் திட்டத்தில் எந்தளவிற்கு சிங்கள இனவாதம் புகுத்தப்பட்டது என்பது புலனாகின்றது. அத்தகைய நிகழ்ச்சி பின்வருமாறு: '1958 ஆம் ஆண்டின் முற்பகுதியில் அம்பாறைக்கு அருகேயுள்ள ஒரு குளத்தில் புல்டோசர் இயந்திரத்தினை இயக்கும் ஒரு சிங்களச் சாரதி ஒரு பழமையான தூண் ஒன்றினைக் கண்டெடுத்தார். அப்போது அங்கு பணியிலிருந்த தமிழ் மேற்பார்வையாளர் அத் தூணை அருகில் உள்ள குளத்திற்குள் எறியும் படி கூறினார். பின்னர் இத் தூண் அம்பாறையில் உள்ள கல்லோயா அபிவிருத்திச் சபையின் அலுவலகத்தில் மக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டபோது, கல்லோயா அபிவிருத்திச் சபையின் தமிழ் உறுப்பினர் ஒருவர் அதனை எதிர்த்தார். இப் புராதான தூணில் நீர்ப்பாசன நீர் பங்கிடுவது தொடர்பான விதிகள் குறிக்கப்பட்டிருந்தன. அது மட்டுமன்றி கல்லோயாப் பிரதேசத்தில் ஒரு நூற்றாண்டுக்கும் முன்பாகவே சிங்கள மக்கள் வாழ்ந்திருந்தனர் என்பதனைச் சந்தேகமற நிரூபிக்கின்ற ஆதாரங்கள் இப் புராதன தூணில் குறிக்கப்பட்டிருந்தன என்றும் கூறப்பட்டது ' எனவே கல்லோயா பிரதேசம் சிங்கள மக்களின் பாரம்பரிய பிரதேசம் என்பதனை நிரூபிக்க அரசாங்கமும் சிங்கள மக்களும் 'கதைகள்' கூற ஆரம்பித்து விட்டனர் என்பதனையே இச் சம்பவம் எடுத்துக் காட்டுகின்றது. அது மட்டுமன்றி தமிழர்கள் சிங்களவர்களின் பாரம்பரிய பிரதேசத்தினை மறைக்க, மறுக்க முற்படுகின்றனர் என்ற வகையில் ஒரு இன முரண்பாட்டினை -இனவாதத்தினை உருவாக்க முயற்சிகள் நடந்துள்ளன என்பதனையும் இச் சம்பவம் காட்டி நிற்கின்றது.

கல்லோயாத் திட்டத்தினை விமர்சித்த கலாநிதி எஸ். ஏ விக்கிரமசிங்ஹ பின்வருமாறு குறிப்பிட்டார். " கல்லோயாக் குடியேற்றத் திட்டத்தின் வரலாறு இறுதியாக எழுதப்படும் போது, இலங்கை மக்கள் அல்ல, அமெரிக்க நிபுணர்களும் ஒப்பந்தக்காரர்களுமே நன்மைகளைப் பெற்ற

சாங்கம் சாதித்தது என்ன? 1946 ஆம் ஆண்டுக் குடிசன மதிப்பீட்டின்படி மட்டக்களப்பு மாவட்டத்தில் (அம்பாறைப் பிரதேசத்தையும் உள்ளடக்கியது) சிங்களவர்களின் எண்ணிக்கை 1185 பேராகும் இது மாவட்டத்தின் மொத்த சனத் தொகை 5.8 சத வீதமாகும். கல்லோயாத்திட்டத்தின் அறிமுகத்தின் பின்னர் 1953ஆம் ஆண்டுக் குடிசன மதிப்பீட்டின்படி இம் மாவட்டத்தில் சிங்களவர்களின் எண்ணிக்கை 31174 பேராகும் இது மாவட்டத்தின் மொத்த சனத்தொகையில் 11. 5 சத வீதமாகும். 1946— 1953 காலப் பகுதியில் இம்மாவட்டத்தின் மொத்த சனத்தொகை 33 சதவீதத்தினால் மட்டுமே அதிகரித்திருந்தது. ஆனால் இதே காலப் பகுதியில் இம் மாவட்டத்தில் சிங்களவர்களின் தொகை16.3 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. மேலும் 1959 ஆம் ஆண்டு தேர்தல் தொகுதி நிர்ணய ஆணைக்குழுவின் சிபார்சின் அடிப்படையில் மட்டக்களப்பு மாவட்டத்தின் தென் பகுதியில் அம்பாறை என்னும் புதியதொரு தேர்தற் தொகுதி உருவாக்கப்பட்டது 1960 ஆம் ஆண்டு பங்குனி மாதம் நடைபெற்ற பொதுத் தேர்தலில் அம்பாறைத் தேர்தற் தொகுதியில் ஒரு சிங்களப் பிரதிநிதி வெற்றி பெற்றுப் பாராளுமன்றம் சென்றார். இதன் மூலம் கிழக்கு மாகாணத்திலிருந்து ஒரு சிங்களப் பிரதிநிதி முதல் முதலில் பாராளுமன்றம் செல்வதற்கு வழி ஏற்பட்டது. இதனைத் தொடர்ந்து 1961 ஆம் ஆண்டு சித்திரை மாதம் 10 ஆம் திகதி அம்பாறை மாவட்டம் உருவாக்கப்பட்டது. எனவே கல்லோயாத் திட்டத்தின் அறிமுகத்தினைத் தொடர்ந்த அடுத்த பத்தாண்டு காலத்திற்குள் கிழக்கு மாகாணத்தில் தமிழர்களைச் சிறுபான்மையாக மாற்றுவதற்கு ஏதுவாக அம்பாறை என ஒரு புதிய மாவட்டமும், சிங்களவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தக் கூடிய வகையில் அம்பாறைஎன்னும் ஒரு சிங்களத் தேர்தற் தொகுதியும் உருவாக்கப்பட்டது.

1963ஆம் ஆண்டு அம்பாறை மாவட்டத்தில் பாணம்பற்று, அக்கரைப்பற்று, கருவாகு - நிந்தாவூர்பற்று,சம்மாந்துறை பற்று ஆகிய 4 தமிழ்ப்பிரிவுகளும்; வேகம் பற்று என்ற சிங்களப் பிரிவுமாக மொத்தம் ஐந்து உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் இருந்தன. 1981ஆம் ஆண்டு அம்பாறை மாவட்டத்தில் 7 தமிழ் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளும் 5 சிங்கள உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளும்காணப்பட்டன. இதன் படி அம்பாறை மாவட்டத்தின் மொத்த நிலப்பரப்பான

சாங்க அதிபர் பிரிவுக்கு உரியதாகும். எனவே அம்பாறை மாவட்டத்தின் மொத்த நிலப் பரப்பில் ஏறத்தாழ 78.5 சத வீதமான நிலப்பரப்பு சிங்களவர் பெரும்பான்மையாக வாழும்பிரதேசமாக உள்ளது. அம்பாறை மாவட்டத்தில் நடைமுறைப் படுத்தப்பட்ட கல்லோயாக் குடியேற்றத் திட்டத்தினதும் ஏனைய குடியேற்றத் திட்டத்தினதும் சாதனைகளாக இவற்றையே குறிப்பிடலாம்.

கிழக்கு மாகாணத்தில் பரவலாக பல்வேறுபட்ட குடியேற்றத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்ட மற்றுமொரு மாவட்டம் திருக்கோணமலை மாவட்டமாகும் விவசாய, நீர்ப்பாசனக் குடியேற்றங்கள் மீனவக்குடியேற்றங்கள், புனித பிரதேசக் குடியேற்றங்கள், ஆயுதப் படையினர் குடியேற்றங்கள் என்ற பல்வேறு பட்டபெயர்களில் பல குடியேற்றத் திட்டங்கள் இம் மாவட்டத்தில் தொடர்ச்சியாக நடைபெற்றுவந்துள்ளன. இவ் வகையில் 1948 - 1919 காலப்பகுதிகளில் அறிமுகப்படுத்தப்பட்ட கந்தளாய்,பதவியாக்குடியேற்றத் திட்டங்கள் முக்கியமானவை. இக்குடியேற்றத் திட்டங்கள் திருகோணமலை மாவட்டச் சனத்தொகையின் இன விகிதாசாரத்தினைப் பெரிதும் மாற்றியுள்ளது

(தொடரும்)

## நிக்கராக்குவாவில் எரிமலை வெடிப்பு

நிக்கராக்குவாவில் இருபது ஆண்டுகளாக உறங்கிக்கிடந்த எரிமலை ஒன்று கடந்தவெள்ளிக்கிழமை வெடித்தது. இத் திடீர்வெடிப்பினைதொடர்ந்து ஆயிரக்கணக்கான மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு இடமாற்றம் செய்யப்பட்டனர். எரிமலையின் தீப்பிழம்புகள் 800 மீற்றர் உயரத்திற்கு மேற்கிளம்பியதாக தெரிவிக்கப்படுகிறது. பெருமளவு சாம்பல் அங்கிருந்து பரவிவருவதனால் பலர்பாதிக்கப்பட்டுள்ளனர்.

12 பேர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை இத்தாலியிலும் ஒரு எரிமலை வெடித்ததினால் 7000 மக்கள் வசித்த கிராமம் பெரும் சேதத்திற்குள்ளாகியதாக தெரிவிக்கப்படுகிறது. எரிமலையின் தாக்கத்திலிருந்து கிராமங்களை பாது

| | | | | |
|---|---|---|---|---|
| இலங்கைத் தமிழர் | 364889 | 84.9 | 1356546 | 65. |
| முஸ்லிம்கள் | 534 17 | 12.4 | 366267 | 17 6 |
| இந்தியத் தமிழர் | — | — | 74616 | 3.6 |
| சிங்களவர் | 7326 | 1.7 | 278829 | 13.4 |
| ஏனையோர் | 4423 | 1.0 | 8397 | 0.3 |
| வட, கிழக்கு பிரதேசம் | 430055 | 100.0 | 2084655 | 100 0 |

1881 ஆம் ஆண்டுக் குடிசன மதிப்பீட்டின்படி இந்தியத் தமிழர் தொகை இலங்கைத் தமிழர் தொகைக்குள் அடங்கி உள்ளது.

வடக்கு கிழக்குப் பிரதேசங்களைப் பொறுத்தவரையில் கிழக்கு மாகாணத்திலேயே திகதி, இங்கினியாகலையில் கல்லோயாத் திட்டத்தினை ஆரம்பித்து வைத்தார். னைக் கட்டுவதற்கு 40 மில்லியன் ரூபாவிற்கு மேல் செலவிடப்படவில்லை.

38 கிராமங்கள் சிங்களக் கிராமங்களாகும் மிகுதி 6 கிராமங்கள் மட்டுமே தமிழ் மக்களுக்குரியதாக இருந்தன. மேலும் இத் தமிழ்க் கிராமங்கள் நீர்ப்பாசன வசதியற்றவை அல்லது சிங்களக் கிராமங்ளினூடாகச் செல்கின்ற நீர்ப்பாசன வசதிகளை உடையனவாகக் காணப்பட்டன. கல்லோயாக் குடியேற்றத் திட்டத்திலுள்ள இங்கினியாகல என்ற இடத்தில் 1956 ஆம் ஆண்டு ஆனிமாதம் 5ஆம் திகதி நடைபெற்ற இனக் கலவரத்தின்போதும் மீண்டும் 1958 ஆம் ஆண்டு வைகாசி மாதம் நடைபெற்ற இனக்கலவரத்தின்போதும் இத் தமிழ்க்

...ளின் பாரம்பரிய பிரதேசத்தினை மறைக்க, மறுக்க முற்படுகின்றனர் என்ற வகையில் ஒரு இன முரண்பாட்டினை -இனவாதத்தினை உருவாக்க முயற்சிகள் நடந்துள்ளன என்பதனையும் இச் சம்பவம் காட்டி நிற்கின்றது.

கல்லோயாத் திட்டத்தினை விமர்சித்த கலாநிதி எஸ். ஏ விக்கிரமசிங்ஹ பின்வருமாறு குறிப்பிட்டார். '' கல்லோயாக் குடியேற்றத் திட்டத்தின் வரலாறு இறுதியாக எழுதப்படும் போது, இலங்கை மக்கள் அல்ல, அமெரிக்க நிபுணர்களும் ஒப்பந்தக்காரர்களுமே நன்மைகளைப் பெற்றனர் என்பது தெரிய வரும் '' அவ்வாறிருப்பின் கல்லோயாத் திட்டத்தின் மூலம் அர

ஒரு சிங்களத் தொகுதியும் உருவாக்கப்பட்டது.

1963ஆம் ஆண்டு அம்பாறை மாவட்டத்தில் பாணம்பற்று, அக்கரைப்பற்று, கருவாகு-நிந்தாவூர்பற்று, சம்மாந்துறை பற்று ஆகிய 4 தமிழ்ப்பிரிவுகளும்; வேகம் பற்று என்ற சிங்களப் பிரிவுமாக மொத்தம் ஐந்து உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் இருந்தன. 1981ஆம் ஆண்டு அம்பாறை மாவட்டத்தில் 7 தமிழ் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளும் 5 சிங்கள உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளும்காணப்பட்டன. இதன்படி அம்பாறை மாவட்டத்தின் மொத்த நிலப்பரப்பான 4318 சதுர கிலோ மீற்றரில் 3391 சதுர கிலோ மீற்றர் நிலப்பரப்பு சிங்கள உதவி அர

ரத்திற்கு மேற்கிளம்பியதாக தெரிவிக்கப்படுகிறது. பெருமளவு சாம்பல் அங்கிருந்து பரவிவருவதனால் பலர்பாதிக்கப்பட்டுள்ளனர்.

12 பேர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதே வேளை இத்தாலியிலும் ஒரு எரிமலை வெடித்ததினால் 7000 மக்கள் வசித்த கிராமம் பெரும் சேதத்திற்குள்ளாகியதாக தெரிவிக்கப்படுகிறது. எரிமலையின் தாக்கத்திலிருந்து கிராமங்களை பாதுகாப்பதற்காக இத்தாலிய விமானங்கள் குண்டு வீசி வருகின்றன.


புத்தாண்டே! புகழ்சேர்த்து - புதுமை
வித்திட்டு விடிவை நோக்கி
எத்திக்கும் தமிழ் மணக்க
தித்திக்கும் இசையுடனே வருக!

புத்தாண்டு வாழ்த்துக்கள்
அனைவருக்கும் உரியதாகுக.

## எழிலகம்

எம்மிடம்

- ★ புடைவை வகைகள்
- ★ அழகு சாதனப்பொருள்கள்
- ★ பிளாஸ்ரிக் வகைகள்
- ★ கண்ணாடிப் பாத்திரங்கள்
- ★ மின்சாரப் பொருள்கள்
- ★ பாடசாலை உபகரணங்கள்
- ★ சிறுவர், சிறுமியர் விளையாட்டுப்பொருள்கள்
- ★ அலுமினிய, சில்வர் பாத்திரங்கள்
- ★ பால்மா வகைகள் இன்னும் உங்களுக்குத் தேவையான சகல பொருள்களையும் ஒரே இடத்தில் வசதியாகப் பெறுவதற்குநாடுங்கள்

# எழிலகம்

மணிக்கூட்டு வீதி -- யாழ்ப்பாணம்

குறிப்பு: வெளிநாட்டு நாணயங்கள் மாற்றிக்கொடுக்கப்படும் (சி-4248)



## இலங்கை வங்கி தமிழ்ப் புத்தாண்டு பண்டிகைக்கால வெகுமதியாக சேமிப்புச் சான்றிதழ்களுக்கு அதிகரித்த வட்டியை வழங்குகின்றது

காலம்: 06-04-1992 முதல் 30-06-1992 வரை மட்டும்

நீங்கள் செலுத்த வேண்டிய தொகை

| சேமிப்புச் சான்றிதழின் பெறுமதி | 6 மாத முதிர்வுக்கு 14 5% | 12 மாத முதிர்வுக்கு 16 %. | 24 மாத முதிர்வுக்கு 17 % |
|---|---|---|---|
| ரூபா 200 | 186/- | 172/- | 149/- |
| ரூபா 500 | 466/- | 431/- | 373/- |
| ரூபா 1000 | 932/- | 862/- | 746/- |
| ரூபா 5000 | 4662/- | 4310/- | 3731/- |
| ரூபா 10,000 | 9324/- | 8621/- | 7463/- |
| ரூபா 25,000 | 23310/- | 21552/- | 18657/- |

உங்கள் அன்பிற்குரியோருக்கு புத்தாண்டுப் பரிசாக இலங்கை வங்கி சேமிப்புச் சான்றிதழ்களைக் கொள்வனவு செய்து அன்பளிப்புச் செய்யுங்கள்

இதோ! இன்னுமோர் அரிய வாய்ப்பு!!

இலங்கை வங்கியின் உத்தரவாதத்துடன் உங்கள் முதலீடுகள் பல்கிப் பெருகிட

## 'சீ பாங் யூனிட் ரஸ்ட்'

பங்குகளில் முதலீடு செய்யுங்கள்

விபரங்களுக்கு முந்துங்கள்

# இலங்கை வங்கி

கிளைகளை நாடுங்கள்! (சி/4233

வரும் புத்தாண்டு
வாழ்வில் வளம் சேர்க்க
வாழ்த்துக்களை வாரி வழங்கும்

## வான்மதி நகை மாடம்

நம்பிக்கையோடு நகைகள் வாங்க
நாடவேண்டிய இடம்

## வான்மதி நகை மாடம்

171, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-4251)



சித்திரையில் பிறக்கும்
புத்தாண்டு வாழ்த்துக்கள் !
எத்திக்கிலும் ஒலிக்கட்டுமென
வாழ்த்தும்

DHL WORLDWIDE EXPRESS

அவனி எங்கும் பவனி வரும் DHL
ஆவணங்கள் சடிதங்களை கவனமுடன் காவிச்செல்லும் DHL
இல்லம் வரை நாடிச்சென்று உரியவரிடம் சேர்ப்பிக்கும் DHL
ஈடற்ற வகையில் செயல் புரியும் DHL

சேவையைப் பெற நாடுங்கள்


### பாம்பு தீண்டியது

(யாழ்ப்பாணம்)

இளம் பெண் ஒருவர் பாம்புக்கடிக்கு இலக்காகி யாழ் போதனா வைத்தியசாலையில் சிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். நேற்று முன்தினம் மாலை ஆறுமணியளவில் கடைக்குச் சென்றபோது ஏழாலை மயிலங்காட்டைச் சேர்ந்த சா.குமுதா (வயது 15) என்பவரையே பாம்பு தீண்டியது. (ச)

### நஷ்ட ஈடு கோரி விண்ணப்பிக்கலாம்

(யாழ்ப்பாணம்)

வளைகுடாப் போரினால் பாதிக்கப்பட்டு நாடுதிரும்பியுள்ள இலங்கையர்கள் நஷ்டஈடு கோருவதற்கான உரித்துடையவர்கள் என்றும் அவ்வாறு கோருவதற்கு கொழும்பிலுள்ள வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஏஜன்சிக்கு எழுத்து மூலம் விண்ணப்பிக்க வேண்டுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது இதற்கான வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தினால் தயாரிக்கப்பட்ட மாதிரி விண்ணப்பப் படிவம் எமது அலுவலகத்தில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது.

### இலங்கை வங்கியில் கைவிசேட கொடுப்பனவு

(யாழ்ப்பாணம்)

இலங்கை வங்கியின் யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள கிளைகள் தமிழ்ப் புதுவருட கைவிசேட கொடுப்பனவுக்காக நாளைமறுதினம் புதன்கிழமை காலை ஏழுமணிக்கு திறக்கப்பட்டு அலுவல்கள் வழமை போல் தொடரும் என்று மாவட்ட முகாமையாளர் அறிவித்துள்ளார்.

### தற்கொலை முயற்சி

(யாழ்ப்பாணம்)

இடம் பெயர்ந்தோர் முகாமில் தங்கியிருந்த மனநோயாளியான பெண்மணி ஒருவர் தற்கொலை முயற்சியில் ஈடுபட்டு உடல் முழுவதும் எரிகாயங்களுடன் யாழ்போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். நேற்று மாலை காரைநகர்ப்பகுதியிலிருந்து இடம்பெயர்ந்தோர் தங்கியுள்ள வளக்கம்பரை முகாமிலேயே இது நடைபெற்றது.

கடந்த சில வருடங்களின் முன் கணவனையும் மகனையும் சிறிலங்கா இராணுவம் கைது செய்து கொலை செய்ததால் மன விரக்தியடைந்த நிலையில் காணப்பட்ட தவமலர் (40) என்பவரே சம்பவ தினம் விளக்கு எண்ணெயை உடலில் ஊற்றிவிட்டு


## மலரும் புத்தாண்டு மங்களகரமானதாய்

அமையவேண்டுமென வாழ்த்துகின்றோம்

- நிர்வாகி, ஆசிரியர்கள், மாணவர்கள்

❀ BASIC ❀ dBASIC III+ ❀ LOTUS 1-2-3
❀ WORD STAR 5.5 (புதிய வெளியீடு)

புதியபிரிவு ஆரம்பம்;

25-04-92 (சனி, ஞாயிறு வகுப்புகள்)

27-04-92

திங்கள், புதன், வெள்ளி வகுப்புகள்

மேலதிக விபரங்களுக்கு ;



UNIKCO
COMPUTER CENTER
Clock Tower Road,
JAFFNA

(சி/4258)



அன்பர்கள் !
ஆதரவாளர்கள் !!
நண்பர்கள் !!!
வாடிக்கையாளர்கள் !!!!

அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்துக்கள்
உரியதாகட்டும்

தரமான தங்க நகைகளை
குறித்த தவணையில்
பெற்றுக் கொள்ள

நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்

சேவையைப் பெற நாடுங்கள்

Cosmos Marketing Service

120, (200) K. K. S. Road

JAFFNA

[சி-4255]

வேங்கைகளின் வெற்றி ஆண்டாக

ஆங்கீரச ஆண்டு மலரட்டும்!

சித்திரைப் புத்தாண்டு

நித்தியமும் மகிழ்ச்சி தர

வாழ்த்துக்களை வழங்கும்

இளந்தென்றல்

★ பாஸ்போர்ட் படங்கள் ★ அடையாள அட்டைப் படங்கள்

★ கலர்ப்பட பிரதிகள் ★ கலர்ப்பட சுருள்கள்

★ போட்டோஸ்ரற் பிரதிகள் ★ அடையாளஅட்டைகவரிடுதல்

★ மற்றும் உங்கள் மங்களகரமான நிகழ்வுகளை

மனதில் பதியும் காட்சிகளாகப் பதிவு செய்ய

நாடுங்கள்

இளந்தென்றல்

14, கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம்

(சி-4252)

நத நிலையில் காணப்பட்ட தவமலர் (40) என்பவரே சம்பவ தினம் விளக்கு எண்ணெயை உடலில் ஊற்றிவிட்டு உடலைத்தீயிட்டபின் முற்றத்தில் நின்று ஓடி விளையாடியதாக தெரிவிக்கப்படுகின்றது.

(ச,க)

## காமினி இலங்கை திரும்பினார்

(கொழும்பு)

தனிப்பட்ட விஜயமொன்றை மேற்கொண்டு இந்தியா சென்றிருந்த முன்னாள் அமைச்சர் காமினி திசாநாயக்கா கடந்த திங்களன்று இலங்கை திரும்பினார்.

கடந்த சில தினங்களாக இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு சென்ற இவர் நாடு திரும்பியுள்ளார்.

## நிலுவைகளை வழங்கப்பணிப்பு

(கொழும்பு)

இலங்கை தேயிலைச் சபை புத்தாண்டிற்குமுன்னர் சிறு தோட்டத் தேயிலைச் செய்கைச் சொந்தக்காரர்களுக்கும் தொழிற்சாலை உரிமையாளர்களுக்கும் எவ்வித நிலுவைகளும்இல்லாமலே பணம் கொடுப்பதற்கு அரசாங்கம் கட்டளையிட்டுள்ளது.

இவர்களுக்கு எவ்வாறு கடன் நிதி வழங்குவது என்பது பற்றித் தேயிலைத் தரகர்களுக்கு இது தொடர்பான வழிகாட்டி நெறி ஒன்றை அனுப்பிவைத்துள்ளது.

கொழும்பு தரகர் சங்கத்தினால் அத்தாட்சிப்படுத்தப்பட்டதற்கு ஏற்ப தனியார் துறையினர் கையாளும் தேயிலையின் அளவை அடிப்படையாகக் கொண்டு தரகர்களுக்கு வங்கி கடன் வழங்க உள்ளது. இதற்கமைய வங்கிகள் மூலமாக நாற்பத்தைந்து கோடி ரூபாவுக்கான நிவாரணத்தை வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது,

இந்தவேளை இதன்மூலம் தரகர்களினால் பெறப்படும் வட்டிக் கொடுப்பனவுகளையும் தேயிலைச் சபை ஏற்றுக் கொள்ளுமென்று தோட்டத் தொழிற்துறை அமைச்சு அறிவித்துள்ளது,

பெற்றுக் கொள்ள

நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்

அழகுநிலா நகை மாடம்

213/D கஸ்தூரியார் வீதி,

யாழ்ப்பாணம்.

(சி-45 32)

சித்திரைப் புத்தாண்டு

சீர் மிகுந்த நல் வாழ்வை

இத் தரையில் வாழ்பவர்க்கு

இனிதே கொடுக்கட்டும்!

எத்திசையும் தமிழ் முழக்கம்

எப்போதும் ஒலிக்கட்டும்!

சத்தியப் போரில் வெற்றிகண்டு

சந்ததிகள் வாழட்டும்!

புத்தாண்டு நல்வாழ்த்துகளை நல்கும்

சுவையருவி

சைவ, அசைவ, உணவு வகைகளுக்கும்

சிற்றுண்டி மற்றும் குளிர்பான வகைகளுக்கும்

நாடவேண்டிய இடம்

சுவையருவி

மின் நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

(சி/4250)

**சிந்தனைக்கு**

உயர்ந்த இலட்சியத்திற்காக உயிர் துறப்போர் ஒரு நாளும் தோற்பதில்லை.

— பைரன் பிரபு

ஈழநாதம்

61, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம் 13-04-1992

தொலைபேசி

ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2308

த. பெ. எண் 35

# புத்தாண்டில் மேலும் முன்னேறுவோம்

இன்று புத்தாண்டு தினம். ஒவ்வொரு புதுவருடம் பிறக்கும் போது இவ்வருடம் சுபீட்சம் நிறைந்ததாகவும் சமாதானம நிலவுவதாகவும் இருக்க வேண்டும் என மக்கள் எதிர்பார்ப்பது வழமையானதே. இம்மக்களின் எதிர்பார்க்கை சரியானதும் கூட. ஆனால் கடந்த சில வருடங்களாகப் புத்தாண்டுகள் வந்துபோயின. ஆனால் தமிழ்மக்கள் எதிர்பார்க்கும் சமாதானமும் சுபீட்சமும் ஏற்படவில்லை பெரும் போர்களும், துன்பங்களும் நெருக்கடிகளுமே ஏற்பட்டன. ஆனால் இத்துன்பங்களின் மத்தியில் தமிழீழ மக்கள் தமது இலட்சியங்கள் நோக்கி குறிப்பிடக்கூடிய அளவில் முன்னேறியுள்ளனர். தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் ஒரு எல்லைக் கோட்டைத்தாண்டியும் உள்ளனர்.

கடந்த வருடம் தமிழீழப்போராட்டம் பெரும் இராணுவ அச்சுறுத்தலுக்கும், அரசியல் நெருக்கடிக்கும் உள்ளான ஆண்டாகும். கடந்த வருடங்கள் யாவற்றையும் விட இராணுவரீதியில் பெரும் மோதல்களைச் சந்தித்த வருடமும் ஆகும். ஆனையிறவு, மணலாறு பெரும் சமர்களில் நூற்றுக்கணக்கான போராளிகள் வீரச்சாவைத் தழுவிக் கொண்டனர். விடுதலைப்புலிகள் இராணுவ ரீதியாகத் தோற்கடிக்கப்பட்டுவிட்டார்கள் என பிரசாரம் செய்யும் அளவிற்கு அரசாங்கம் சென்றது.

மேலும் யாழ்ப்பாணக் குடா நாட்டின் மீதான முற்றுகையும் தீவிரமடைந்தது யாழ்ப்பாண குடா நாட்டிற்குள் பிரவேசிக்கும் இரு தரைவழி பிரதான பாதைகளும் இராணுவத்தினரால் மூடப்பட்டன. பொருளாதார முற்றுகை மேலும் தீவிரமாகியது இதேவேளை யாழ் குடாநாட்டின் மீது எப்பொழுதும் இராணுவ நடவடிக்கை நடைபெறலாம் என இராணுவ வட்டாரங்கள் மிரட்டியும் வந்தன

இதேவேளை, அரசியல் ரீதியாகவும் பெரும் நெருக்குதலும் அச்சுறுத்தலும் இவ்வாண்டில் ஏற்பட்டது ராஜீவ் காந்தியின் கொலையுடன் விடுதலைப் புலிகளைச் சம்பந்தப்படுத்தி இந்திய மத்திய அரசும், தமிழக மாநில அரசும் புலிகளுக்கு எதிரான நடவடிக்கையை எடுத்தன. விடுதலைப் புலிகளை 'ஒரு பயங்கரவாத' இயக்கம் எனக் காட்ட இந்தியா தீவிரமாக முனைந்தது அதேவேளை, சிறிலங்கா கடற்படையினருடன் ஒத்துழைக்கவும் முன்வந்தது. அத்தோடு, வங்காள விரிகுடாவில் வைத்து புலிகளின் கப்பல் ஒன்றையும் இந்திய கடற்படை கைப்பற்றிப் பறிமுதல்செய்தது

# கொலைகளுக்கான கூட்டுப் பொறுப்பிலிருந்து தப்ப முயலும் எதிர்க்கட்சிகள்

**- சாரணன் -**

ஜே. வி.பி. யைஅழித்தொழிக்கும் முயற்சியில் பிரேமதாசா அரசாங்கம்ஏறத்குறைய 50,000 பேர்வரை கொன்றுகுவித்ததாகத் தகவல். ஜே. வி. பி.யினர் ஐ தே. க வினர் மீதும் சு க. பிரமுகர்கள் மீதும் விஜய குமாரணதுங்க தலைமை வகித்த மக்கள் கட்சி மீதும், கொம்யூனிஸ்ட் கட்சி மீதும் தாக்குதல்களை நடாத்தினர். அதாவது ஏறக்குறைய தென்னிலங்கையின் சகல அரசியற் கட்சிகளிற்கெதிராகவும் ஜே. வி பியினரின் தாக்குதல்கள் அமைத்தன. அத்துடன் பொலிஸ். ராணுவத்தினரின் குடும்பங்கள் மீதும் தாக்குதல்கள் நடந்தன இந்நிலையில் தென்னிலங்கையில் யாரும் கொல்லப்படுவதற்கான நியாயம் ஜே வி பியின் பேரல் விரிந்திருந்தது.

ஜே வி. பியின் இத்தகைய செயல்கள் சகல அரசியல் கட்சிகளையும் ஜே வி. பி இற்கு எதிராக ஐக்கியப்படுத்தின, அதனால் எந்த வகையிலும் எந்த வழிமுறைகளின் கீழும் ஜே வி பி அழிக்கப்படுவதை தென்னிலங்கையின் சகல அரசியல் கட்சிகளும் விரும்பின அதற்காக அரசுக்கு ஒத்தாசையும் புரிந்தன. உண்மையில் பிரேமதாசா பெரும் படுகொலைகள் மூலம் ஜே. வி. பியை நசுக்குவதை எல்லாக் கட்சிகளும் மனமார விரும்பின என்று கூறலாம். பிரேமதாசாவிற்கு எதிரான பத்திரிகைகளும் கூட இந்த விசயத்தில் பிரேமாவிற்கு ஆதரவளித்தன.

இச்சூழலை பிரேமதாசாவும் சரி அதிகாரத்தில் உள்ள ஏனையோரும் சரி தமது தனிப்பட்ட ஏனைய தேவைகளை ஈட்டுவதற்குச் சாதகமாகப் பயன்படுத்தினர். குறிப்பாக சு. கட்சியினரை ஒடுக்குவதற்கும் ஒரு நல்ல சந்தர்ப்பமாக பிரேமதாசா இதைப் பயன்படுத்தினார் என்று அரசியல் விமர்சகர்கள் கூறிவந்தனர். முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபர் உடுகொம்பொலவின் அண்மைய அறிவிப்பானது ஒரு ஊகத்தை மெய்பித்துள்ளது அதாவது126 சு.கபிரமுகர்களைஐ.தே.கட்சி ஆதரவாளர்கள் அல்லது குண்டர்கள் (கரும்பூனைகள்) கொலை செய்தமைக்கான ஆதாரங்களுடன் கூடிய விபரப் பட்டியல் தன்னிடம் உள்ளதாக அறிவித்துள்ளார்.

இதே வேளை தனிப்பட்ட தமது கோபதாபங்களைத் தீர்க்கவும் பொலிஸ் ராணுவம் மற்றும் ஐ தே.க வட்டாரத்தைச் சோந்தோர் இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தியுள்ளனர் என்பது தெரியவந்துள்ளது எனவே ஜே.வி.பியின் பெயரால் பல்வேறு நலன்களின் அடிப்படையில் பல்வேறு தேவைகளுக்காக பொதுமக்களும் கலைஞர்களும் மாற்றுகட்சிக்காரரும் கொல்லப்பட்டிருக்கிறார்கள் என்பது தெளிவு ஆனால் இங்கு ஒரு அடிப்படைக் கேள்வியை எழுப்பலாம்.

ஜே.வி.பி உறுப்பினர்கள் எவரும் குரூரமாகக் கொல்லப்படுவதை இந்த சகல அரசியல்கட்சிகளும் ஏன் ஆட்சேபிக்கவில்லை என்பதே அது. அதனை தமது நலன்களுக்காக அன்று ஆதரித்தவர்கள் இன்று பிரேமாவை வீழ்த்துவதற்காக அக்கொலைகளை ஒரு சாட்டாக முன்வைப்பது விந்தையானது அத்துடன் ஜே வி.பியை அழிப்பதற்கு முதன்மை கொடுத்த சூழலில் தமதுஉறுப்பினர்களைஐ.தே.க கொலை செய்வதை அறிந்திருந்தும் அந்தக்காலகட்டத்தில் அதனை இந்தக் கட்சிகள் எல்லாம் சகித்துக்கொண்டிருந்தன என்பது கவனிக்கத்தக்கது தாமும் சேர்ந்து பொறுப்பேற்கவேண்டிய கொலைக்குற்றங்களை நிலைமை மாறியுள்ள இன்றைய சூழலில் பிரேமதாசாவின் தலையில் மட்டும் இவர்கள் சுமத்துகிறார்கள்.

## பழனி இடைத்தேர்தலில் தி. மு. க. வேட்பாளராக

# 'தடா'வின் கீழ் கைது செய்யப்பட்ட திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன்

(சென்னை)

விடுதலைப்புலிகளுக்கு ஆதரவாகச் செயற்பட்டதாக குற்றஞ்சாட்டப்பட்டு 'தடா' வின் கீழ் கைதாகிச் சிறையில் இருக்கும் முன்னாள் மாநில அமைச்சர் திருமதிசுப்புலட்சுமி ஜெகதீசன் பழனி இடைத் தேர்தலில் வேட்பாளராகநிறுத்த தி. மு, க. முடிவு செய்துள்ளதாக தெரிவிககப்படுகிறது.

சுப்புலட்சுமியை நிறுத்துவதன் மூலம் 'சுப்புலட்சுமியைக் கசிகைகழுவிவிட்டது' என்ற எதிர்த்தரப்பினரின் வாதங்களையும் சுலபமாக முறியடித்துவிடலாம் என்றும், 'தடா' எதிர்ப்புப் பிரசாரங்கள் நடத்தவும் தி மு க. விற்கு வசதி ஏற்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் சிறையில் இருப்பவர் தேர்தலில் போட்டியிடுகிறார் என்பதே தேர்தலுக்கு பரபரப்பை கொடுக்கும் என்பதும் தி. மு. க. வின் பலத்த நம்பிக்கை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

பழனித் தொகுதி எம் பி. யான காங்கிரஸ் வேட்பாளர் சேனாபதிகவுண்டர்சமீபத்தில் இறந்து போனதால் பழனித் தொகுதியில் இடைத்தேர்தல் நடைபெறவுள்ளது.

சென்ற தேர்தலில் சேனாபதி கவுண்டரிடம் தோற்றுப் போன ராஜ்குமார் மன்றாடியக்குப் பதிலாக திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசனின் பெயரை தி. மு. க. தேர்ந்தெடுத்துள்ளது.

## நுவரெலியாவில் பாதுகாப்பு தீவிரம்

(கொழும்பு)

விடுமுறையைக் கழிப்பதற்காக வரும் உல்லாசப்பயணிகளின் தொகை அதிகரித்துள்ளதையடுத்து நுவரெலியாப் பகுதியில் பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டிருப்பதாக பொலிஸ் வட்டாரங்கள்கூறியுள்ளன நுவரெலியாப் பகுதியில் வசிப்பவர்களினதும், உல்லாசப்பயணத்திற்காக வருவோரதும் நன்மை கருதி பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டதாக பொலிசார் தெரிவித்துள்ளனர்.

# காங்கிரஸ் தேசிய மாநாட்டிற்கு மண்டேலா, அரபாத் விஜயம்

(டில்லி)

ஆந்திர மாநிலம் திருப்பதியில நடைபெறும் அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் தொண்ணூறாவது தேசிய மாநாட்டில் கலந்து கொள்வதற்கு ஆபிரிக்கத் தேசிய காங்கிரஸ் தலைவர் நெல்சன் மண்டேலா, பாலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் யாசீர் அரபாத் ஆகியோர் இந்தியா வரவுள்ளனர்.

பதின்நான்காம் திகதி முதல் மூன்று நாட்கள் நடைபெறவிருக்கும் இத்தேசிய மாநாட்டில் பிரதமர் மற்றும் மத்திய அமைச்சர்கள் உட்பட பலர் கலந்து கொள்ள உள்ளனர். இதற்காக ஆந்திரா மாநிலத்தின் எல்லைப் பகுதிகளிலும் பாதுகாப்பு நடவடிக்கைகள்

## குர்திஷ் பகுதிகளில் ஈராக் தாக்குதல்

# வேலைவாய்ப்பில் ஒதுக்கீடு; பொதுக்கருத்து வேண்டும்

(டில்லி)

மத்திய, மாநில அரசுகளின் வேலை வாய்ப்பில் இட ஒதுக்கீடு தொடர்பான பிரச்சினையில் பொதுக் கருத்து ஒன்று எட்டப்பட வேண்டுமெனப் பிரதமர் பி. வி. நரசிம்மராவ் கேட்டுக்கொண்டுள்ளார்.

கடந்த வெள்ளி புதுடில்லியில் முதலமைச்சர்கள்மாநாட்டைத் தொடக்கி வைத்துப் பேசிய பிரதமர் ராவ் மேலும் கூறுகையில் இந்த விவகாரம் தொடர்பாக உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பு வெளியிடப்பட்டதும் மீண்டும் ஒருமுறை முதலமைச்சர்கள் மாநாடுகூட்டப்படவேண்டுமெனவும் கேட்டுக்

**பிவி.நரசிம்மராவ்**

பிரிவினர்களை இனம்காண்பதற்காக பொருளாதாரத் தகுதிகளை ஒரு அடிப்படையாகக் கொள்வதனை பல மாநில அரசாங்கங்களும் ஏற்றுக்கொள்ள இணங்கியுள்ளன எனினும் தமிழ்நாடும், பீகாரும் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளன. பொருளாதார அடிப்படையை ஏற்றுக்கொள்வதை பாரதீய ஜனதா வரவேற்றபோதிலும் இது தொடர்பாகத் தமது கட்சி அமைத்திருக்கும்தேசிய குழுவின்முடிவுகள் வரும்வரை காத்திருப்பதாகப் பாரதீய ஜனதா

முனைந்தது அதேவேளை, சிறிலங்கா கடற்படையின ருடன் ஒத்துழைக்கவும் முன்வந்தது. அத்தோடு, வங்காள விரிகுடாவில் வைத்து புலிகளின் கப்பல் ஒன்றையும் இந்திய கடற்படை கைப்பற்றிப் பறிமுதல்செய்தது

ஆனால், இந் நெருக்கடியின் மத்தியிலும், தமிழீழப் போராட்டத்தின் முன்னேற்றம் தடைப்பட்டதாக இல்லை. இராணுவ ரீதியாக சிறிலங்கா இராணுவத் தரப்பு போட்டவை யாவும் தப்புக் கணக்கு என விடுதலைப்புலிகள் நிரூபித்தனர். போர்முனைக்கு புதிய தந்திரோபாயம் ஒன்றை வகுத்த விடுதலைப்புலிகள் இராணுவத்தினருக்குப் பாரிய இழப்புக்களை ஏற்படுத்தினர். இதனால் இராணுவத்தினரின் யாழ்ப்பாணப் படையெடுப்பு பிசுபிசுத்துப் போனது

அத்தோடு, புலிகளை எவ்வாறு எதிர் கொள்வது என்பது குறித்து என்றுமில்லாதவாறு இராணுவத் தளபதிகள் இடையே பெரும் கருத்து முரண்பாடுகளையும் ஏற்படுத்தியுள்ளது. இதேவேளை, இராணுவத் தளபதி லெப். ஜெனரல் வைத்தியரெட்ண கூறுவது போல் கிழக்கில் மூன்று மாதத்திற்குள் புலிகளை வெற்றி கொண்டால், தனது பதவியையே இராஜினாமாச் செய்யத் தயார் என கூட்டுப்படை தலைமைத் தளபதிஜெனரல் ஹமில்டன் வனசிங்கா தெரிவிக்கும் அளவிற்கு நிலைமை சென்றது.

இதேபோன்றே இக்காலப் பகுதியில், அரசியல், இராஜதந்திர ரீதியாகப் புலிகள் மேற்கொண்ட நடவடிக்கைகள் சிறிலங்கா அரசாங்கத்தின் திட்டங்களை தோற்கடித்தன எனலாம். இனப்பிரச்சினைக்கு சமாதான தீர்வு, பேச்சுவார்த்தை போன்றவற்றில் அரசிற்கு நாட்டமுள்ளது போலவும், விடுதலைப் புலிகளே அதற்கு உடன்படுகிறார்கள் இல்லை எனவும் சர்வதேச ரீதியாகப் பிரசாரம் செய்யும் நோக்கில் சிறிலங்கா அரசாங்கம் எடுத்த நடவடிக்கைகள் புலிகளின் திறமையான இராஜதந்திர அணுகுமுறையால் தோற்கடிக்கப்பட்டுள்ளன. தொண்டமானின் சமரசத் திட்டம் பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் முயற்சிகள் மூலம் புலிகளை அரசியல் ரீதியாகத் தோற்கடிக்க முற்பட்ட அரசாங்கத்தின் நடவடிக்கைகளை புலிகள் அவற்றைக் கொண்டே தோற்கடித்தனர். அதாவது புலிகளை நோக்கி அரசாங்கம் எறிந்த பந்துகளை லாவகமாக அரசாங்கத்திடம் புலிகள் திருப்பிவிட்டார்கள்.

துன்பங்களும், நெருக்கடிகளும் அதிகமுள்ள வருடமாகக் கடந்த வருடம் கழிந்த போதும், அரசியல் இராணுவ ரீதியில் தமிழீழப் போராட்டம் இராணுவ அரசியல் வெற்றிகளை ஈட்டிய ஒரு வருடமாகும். அதாவது தமிழீழப் போராட்டம் ஒரு குறிப்பிடக் கூடிய வளர்ச்சி கண்டது. இவ்வகையில், இது தமிழீழ மக்களின் நிரந்தர அமைதிக்கும், பாதுகாப்பிற்கும் உதவிய ஆண்டாகவே அமைந்தது இதேபோன்று. இப் புத்தாண்டிலும், தமிழீழ மக்களின் நிரந்தர அமைதிக்கும், பாதுகாப்பிற்கும் வழிவகுக்கும் ஆண்டாக அமையட்டும் எதிர்காலச் சந்ததியின் நல்வாழ்விற்காக துன்பம் வரினும் புத்தாண்டை இன்முகத்துடன் எதிர் கொள்வோம்.

# ஈராக் தாக்குதல் - அமெரிக்கா சந்தேகம்

(வாஷிங்டன்)

ஈராக் தனது வடபகுதியில் துருப்புக்களையும், பூமியிலிருந்து வானத்துக்குச் செல்லும் ஏவுகணைகளையும் குவித்திருப்பதாகவும் குர்திஷ் அதிருப்தியாளர்கள் மீது புதிய தாக்குதல்களை அது நடத்தக் கூடும் என்றும் அமெரிக்கா கூறியுள்ளது.

அமெரிக்க தேசிய பாதுகாப்பு ஆலோசகர் பிரெண்ட் ஸ்கோ கிராப்ட் வாஷிங்டனில் இதனைத் தெரிவித்தார் தரைப்படைகள் குர்திஷ்பகுதிகளுக்கு நகர்ந்து வருகின்றன நடவடிக்கை எதுவுமில்லை. ஆனால் இராணுவத் தாக்குதல் சாத்தியத்தை நிராகரிப்பதற்கும் இல்லை எனவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன் அமெரிக்க பிரித்தானிய பிரெஞ்சு விமானங்கள் பறந்து வரும் பிராந்தியத்துக்கு பூமியிலிருந்து வானத்துக்குச் செல்லும் ஏவுகணைகளையும் சதாம்குசைன் நகர்த்திருக்கிறார் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதே நேரம் அமெரிக்க முப்படைத்தளபதி ஜெனரல் கொலின்பவல் பிரித்தானிய பிரதமரை லண்டனில் சந்தித்து இது குறித்து விவாதித்தார்.

எமது படைகள் எந்த நிலைமையையும் சமாளிக்கும் சக்தியுடன் விளங்குகின்றன என்றும்.

புதிய நெருக்கடியைக் கையாள்வது குறித்து அமெரிக்க அதிகாரிகள் பிரித்தானியா பிரான்ஸ், துருக்கி சவூதி அரேபியா ஆகிய நாடுகளுடன் பேசிவருவதாகவும் கொலின் பவல் தெரிவித்தார்.

இதற்கிடையில் வட ஈராக்கில குர்திஷ் தலைவர்கள் தங்கள் இருநாள் கூட்டத்தை முடித்துக் கொண்டுள்ளனர். அக் கூட்டத்தில் அவர்கள் மேற்கு நாட்டு அரசாங்கங்கள் பாதுகாப்பு அளிக்கத் தவறிவிட்டன என்று குற்றஞ் சாட்டியுள்ளனர்.

# தென்னாபிரிக்கா மீதான எரிபொருள் தடை நீக்கம்

## ஐரோப்பிய சமூகம் அறிவிப்பு

(லக்ஸம் போர்க்)

தென்னாபிரிக்காவுக்கு எதிரான ஐரோப்பிய சமூக எரிபொருள் தடையை நீக்க அதன் வெளிநாட்டு மந்திரிகள் இணக்கம் தெரிவித்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

தென்னாபிரிக்க ஜனாதிபதி டி. கிளார்க்கின் இன ஒதுக்கல் ஒழிப்பு சம்பந்தமான வாக்கெடுப்பில் வெள்ளையர்கள் அவரை ஆதரித்ததை அடுத்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கு பூர்வாங்க நடவடிக்கையாக விளையாட்டுத்துறை, கலாசாரம் தொடர்பு ஆகியவை சம்பந்தமான தடையை அவர்கள் நீக்கியிருக்கிறார்கள்.

தற்போது ஆயுதங்கள். ஆயுதப்படைகளுக்கான முக்கிய பொருள்கள் ஆகியவற்றுக்கான தடை ஆகியவை மட்டுமே அமுலில் உள்ளன.

தென்னாபிரிக்காவில் ஜனநாயகத்தை ஏற்படுத்துமுகமாக பெரும்பான்மையினரிடம் அதிகார மாற்றம் செய்வது சம்பந்தமாக இடம் பெற்று வரும் பல கட்சி பேச்சுவார்த்தைகளின் முன்னேற்றத்தை தாங்கள் கவனித்து வருவதாகவும் ஐரோப்பிய சமூக அமைச்சர்கள் தெரிவித்தனர்.

இதற்காக ஆந்திரா மாநிலத்தின் எல்லைப் பகுதிகளிலும் பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டுள்ளன. முக்கியமான இடங்களில் தமிழ்நாடு, மற்றும் கர்நாடக மாநிலங்களைச் சேர்ந்த இரகசியப் பொலிசார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். மேலும் பத்தாயிரம் பொலிசார் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்

தும் மீண்டும் ஒருமுறை முதலமைச்சர்கள் மாநாடுகூட்டப்படவேண்டுமெனவும் கேட்டுக் கொண்டார்.

இம்மாநாட்டில் பின்தங்கிய

கள் வரும்வரை காத்திருப்பதாகப் பாரதீய ஜனதாவின் ஆளுகையிலுள்ள நான்கு மாநிலங்களும் கூறியுள்ளன.

# குண்டு வெடிப்பு தொடரும்; ஐ.ஆர்.ஏ. எச்சரிக்கை

(லண்டன்)

லண்டனில் இடம் பெற்ற காரிக்குண்டு வெடிப்பைத் தொடர்ந்து பிரித்தானியா மேலும் உயிரிழப்பையும் சேதத்தையும் எதிர்நோக்கும்என்று ஐரிஸ்குடியரசுராணுவஇயக்கம் (ஐ.ஆர்.ஏ) எச்சரிக்கை விடுத்துள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை லண்டனில் கார்க்குண்டொன்று வெடித்து மூன்று பேர் கொல்லப்பட்டும் தொண்ணூறு பேர் காயமடைந்ததும் தெரிந்ததே இக்குண்டு வெடிப்பை ஐ.ஆர்.ஏ நடாத்தியதும் அறிந்ததே.

இக் குண்டு வெடிப்பானது ஜோன்மேயர் தேர்தலில் வெற்றியீட்டிய ஒரு சில மணி நேரத்தில் இடம் பெற்றது என்பதும் குறிப்பிடத்தக்கது

அத்துடன் இக் குண்டு வெடிப்பின் போது லட்சக்கணக்கான ஸ்டேலிங் பவுண் பெறுமதியானகட்டிடங்களும் உடைமைகளும் சேதமாக்கப்பட்டன

# நடுநிலை நாடுகளிடம் லிபியா ஒப்படைக்க தயார்

(வாஷிங்டன்)

விமானக் குண்டுவெடிப்பில் சம்பந்தப்பட்ட இருவரையும் லிபியா நடுநிலை நாடொன்றிடம் கையளிக்க தயாராக இருப்பதாக கூறிய போதிலும் அதன் செயல்கள் நம்பிக்கை அளிப்பதாக இல்லையென அமெரிக்க தேசிய பாதுகாப்பு ஆலோசகர் பிரெண்ட்ஸ்கோகிராப் தெரிவித்துள்ளார்

அமெரிக்கா, அல்லது பிரிட்டனிடம் இந்த இருவரையும் ஒப்படைக்கும்படி ஐ நா. கோரியிருந்தது.

லிபியாவின் இப்புதியநிலைப்பாட்டை ஐ நா. செயலர் பூட்டோஸ் காலிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

எந்த நடுநிலைநாடு என்பதை லிபியா குறிப்பிடவில்லை. மேலும் குறிப்பிட்ட நடுநிலைநாடு இரு சந்தேகநபர்களையும் அமெரிக்க அல்லது பிரிட்டனிடம் ஒப்படைக்குமா என்பதும் தெளிவாக இல்லை.

லிபியாவின் இப்புதிய யோசனையினால் இப்பிரச்சினை அரபு லீக்கின் கையை விட்டு நழுவி விட்டதாக கருதப்படுகிறது அரபுலீக் பூட்டோஸ் கலியின் பதிலுக்காக காத்துள்ளது.

டுனிஸியாவில் வைத்து ஐ. நா. பிரதிநிதிகளுக்கும், அரபு லீக் பிரதிநிதிகளுக்கும் முன்னிலையில் இருவரையும் நடுநிலை நாடொன்றிடம் கையளிப்பதாக லிபியா கூறியுள்ளது இவர்கள் மீது குறிப்பிட்ட நடுநிலை நாட்டில் விசாரணைகள் நடாத்த லிபியா அனுமதிக்கும் என்றும் ஆனால் இதற்கு லிபியா விதித்திருக்கும் நிபந்தனை வாஷிங்டனுக்கும், லண்டனுக்கும் ஏற்கக் கூடியதாக இல்லை எனவும் இராஜதந்திரிகள் தெரிவித்துள்ளனர்.

# ஐ. தே. க. தூதுக்குழுவினர் காங்.தலைவர்களோடு பேச்சு

அமைச்சர் மன்சூர்தலைமையில் திருப்பதியில் நடைபெறும் இந்திய காங்கிரஸ் கட்சி மாநாட்டில் கலந்து கொள்ள செல்லும் ஐ. தே. கட்சி தூதுக்குழுவினர் காங்கிரஸ் தலைவர்களோடு பேச்சு வார்த்தை நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

இந்தியப் பிரதமர் பி. வி. நரசிம்மராவ் மற்றும் வெளியுறவு இணைஅமைச்சர் எட்வார்டோ பெலாய்ரோ ஆகியோரைச் சந்திக்கும் ஐ. தே. க. தூதுக்குழுவினர் அரசியல் - பொருளாதார உறவுகள் குறித்தும் பேச்சுக்கள் நடத்தவுள்ளனர்.

# "கல்வாரிப்பரணி"

(குருநகர்)

யாழ். திருமறைக் கலாமன்றம் தயாரித்து கடந்த மூன்று தினங்கள் (10 ஆம், 11 ஆம், 12 ஆம் திகதிகளில்) மேடையேற்றிய "கல்வாரிப் பரணி" பக்தி இசையுரை நாடகச்சித்திரம் இன்றும் (13-04-1992) விசேட காட்சியாக இடம் பெறுகிறது.

யேசுக் கிறிஸ்துவின் திருப்பாடுகளைச் சித்திரிக்கும் 'கல்வாரிப் பரணி' யை பெருந்தொகையான மக்கள் தபக்காலத்தை முன்னிட்டு பார்க்க விண்ணப்பித்துள்ளதை ஏற்று காட்சி நீடிக்கப்பட்டுள்ளதாக பொதுச் செயலாளர் திரு வி ஜே. கொன்ஸன்ரைன் தெரிவித்தார். 2

ஈழநாதம்

### பிரேமதாசா கூட்டிய மாநாட்டில்

# இந்தியத் தூதுவர் ஜா கலந்து கொள்ளவில்லை

[கொழும்பு]

தென்னாசியப் பிராந்திய நாடுகளின் தூதுவரகங்களின் தலைவர்கள் கூட்டமொன்று அண்மையில் ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற போது இந்திய உயர் ஸ்தானிகர் இதில்கலந்துகொள்ளவில்லை.

பிரேமதாசா தலைமையில் ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்ற இக் கூட்டத்தின் போது சிறிலங்கா அரசின் சார்பில் பிரதமர் டி.பி. விஜயதுங்கா, வெளிவிவகார அமைச்சர் ஹரல்ட் ஹேரத், கைத்தொழில் விஞ்ஞான, தொழில்நுட்ப அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, மாகாண சபைகள் அமைச்சர் கோன் அமரதுங்க ஆகியோரும் கலந்து கொண்டனர்.

அக் கூட்டத்தில் சார்க் அமைப்பு அரச மட்டத்தில் மட்டும் செயற்படக் கூடாது. மக்களிடையிலான தொடர்புகள் புரிந்துணர்வை வளர்க்கவேண்டும் அதன் மூலம் எமது நாடுகளுக்கிடையே நெருங்கிய உறவுகளுக்கு ஊக்குவிக்க வேண்டும் எனத் தொடங்கி திரு பிரேமதாசா நீண்ட உரையொன்றை ஆற்றினார்.

இக் கூட்டத்தின் போது மாலைதீவு உயர் ஸ்தானிகர் ஜனாப் அஹமத் அப்துல்லா, பாகிஸ்தான் உயர் ஸ்தானிகர் ஜனாப் அபாட் ஹூசென், பங்களாதேஷ் உயர் ஸ்தானிகர் எஸ். எம். சௌத்ரி ஆகியோருடன் இந்தியத் தூதுவர் சார்பாக செரிஜோர்ச் கலந்து கொண்டார்.

### யாழ். கல்வித் திணைக்கள

# கல்விமுகாமைத்துவ பிரிவில் பண மோசடி

யாழ். கல்வித்திணைக்களத்தில் இயங்கும் கல்வி முகாமைத்துவப் பிரிவில் போலிக் கையொப்பமிட்டு நிதிமோசடி செய்யப்பட்டுள்ளதாக அறியப்படுகின்றது.

முகாமைத்துவப் பிரிவினரால் வாராந்தம் அதிபர்கள் மற்றும்ஆசிரியர்களுக்கு நடைபெற்று வந்த அதிபர்தரப் பயிற்சி பாட இணைப்பாளர்பயிற்சிபகுதித்தலைவர்களுக்கான பயிற்சி ஆகியவற்றிற்கான கொடுப்பனவுகளில் இந்த மோசடி இடம் பெற்றுள்ளது

சமுகம் கொடுக்காத பாடசாலை ஆசிரியர்கள், அதிபர்கள் ஆகியோரின் கொடுப்பனவுகளை யாழ். மாவட்டத்தில் புதிய பாடசாலைகள் உருவாக்கப்பட்டு, அப்பாடசாலைகளின் பெயர்களிலும் மேலும் பணிபுரியாத அதிபர்கள் ஆசிரியர்களின் பெயர்களிலும் சமுகம் கொடுக்காத நாளொன்றுக்கு தலா 40 ரூபா வீதம் பல ஆயிரம் ரூபா மோசடி இடம் பெற்றுள்ளதாகத் தெரியவருகிறது.

மேலும் இக்கொடுப்பனவுகளின் பண உறுதிச் சிட்டைகள் திணைக்களத்தின் அபிவிருத்திப் பகுதியின் சிபார்சின்றி, நேரடியாக யாழ். கல்விப்பணிப்பாளரினால்சிபார்சு செய்யப்பட்டு, அதற்குரிய பணக்கொடுப்பனவு பெறப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. தற்போது இத்தில்லுமுல்லுக்குத் தடையாக இருக்கின்ற அபிவிருத்திப்பகுதி அதிகாரியை இக் கொடுப்பனவுக்குரிய பண உறுதிச் சிட்டைகளைசிபார்சு செய்யும்பொறுப்பிலிருந்து நீக்கப்பட்டுள்ளதாகவும் அறியப்படுகின்றது

தமிழீழ மக்கள் அனைவருக்கும் எமது

இதயங்கனிந்த

தமிழ் புத்தாண்டு வாழ்த்துக்கள்

உங்களுக்குத் தேவையான

## ஆட்கொணர்வு மனு தாக்கல்

(கொழும்பு)

அக்கரைப்பற்று பகுதியில் அகதி முகாமில் இருந்தவேளையில் கடந்த 24-06-90-ல் இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்ட மாணவனை விடுவிக்கக் கோரி அவரது தந்தையார் கணபதி சின்னத்தம்பி உயர் நீதிமன்றத்தில் வழக்கொன்றை தாக்கல் செய்துள்ளார்.

மேன் முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இவ் வழக்கில் இராணுவ தளபதி ஜெனரல் சிசில் வைத்தியரெட்ணா, சட்டமா அதிபர் ஆகியோர் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளது

சின்னத்தம்பி இளஞ்செழியன் என்னும் பெயருடைய மேற்படி மாணவன் அக்கரைப்பற்று முதலாம் டிவிஷன் முஸ்லிம் பாடசாலையிலிருந்த இராணுவத்தினரால் 26-06-90ல் கைது செய்யப்பட்டார் எனவும் எனினும்பிரஜைகள் குழுக்களினூடாக விடுவிக்கப்பட்டவர்களில் இளஞ்செழியன் இருக்கவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அமைச்சர் தொண்டமான் இந்தியா பயணம்

[கொழும்பு]

உல்லாசப் பயண கிராமியத் தொழிற்துறை அமைச்சர் எஸ். தொண்டமான் சித்திரைப் புதுவருடத்தை முன்னிட்டு அவரது சொந்த ஊரிலுள்ள நாராயண பெருமாள் கோயிலில் நடைபெறும் மாபெரும் திருவிழாவில் கலந்து கொள்வதற்காக நேற்று முன்தினம் இந்தியா பயணமானார். அமைச்சர் தொண்டமானின் குடும்பத்தினர் பல தலைமுறைகளாக இக் கோயிலுடன் தொடர்பு கொண்டவர் என தெரியவருகிறது. அமைச்சர் எதிர்வரும் பதினாறாம் திகதி மீண்டு நாடு திரும்புவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

### குண்டு

ணும் எமக்குக்கிடைக்கவில்லை என்றும் சேமவன்ச அமரசிங்கா பி. பி. ஸிக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சிகள் ஜனநாயகத்தைக் காப்பாற்ற நடத்தும் போராட்டத்தை ஜே. வி. பி. வரவேற்கிறது. இந்த நாட்டில் இப்போது உள்ள ஜனநாயகத்தை நீடிக்க விரும்புகிறவர்களே கொழும்பு கார் குண்டு வெடிப்புக்குக் காரணம். எமது செயற்பாடுகள் மக்களுக்கு எதிரானவையோ ஜனநாயகத்துக்கு எதிரான

# யாழ். வங்கிகளுக்கு பணம் அனுப்ப தலைமையகம் தயக்கம்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட அரச வங்கிகளுக்குத் தேவையான பணத்தை அனுப்பிவைப்பதற்கு இவ்வங்கிகளின் தலைமை அலுவலகம் தயக்கம் காட்டிவருகிறது. இதனால் இம் மாவட்டத்தின் திரவநிலைப்பணச் சுற்றோட்டத்தை சீராக்க முடியாதநிலை தோன்றியுள்ளதாக வங்கி உயர் அதிகாரிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

யாழ். மாவட்டத்தில் தற்போது தோன்றியிருக்கும் பணப்பற்றாக் குறையை நீக்குவதற்குத் தேவையான பணத்தை அனுப்பி வைக்கும்படி இலங்கை வங்கி, மக்கள் வங்கி ஆகியவை தமது தலைமை அலுவலகத்தைக் கேட்டுக்கொண்டபோதிலும் தேவையான அளவு பணம் அனுப்பி வைக்கப்படவில்லை.

### காரணம் காப்புறுதியில்லை:-

இவ் வங்கிகள் காப்புறுதி செய்யப்படாத காரணத்தினால் பணத்திற்கு பாதுகாப்பு உத்தரவாதம் இல்லை என்று இவ் வங்கிகளின் தலைமை அலுவலக அதிகாரிகள் கருதுகின்றனர். காப்புறுதி செய்வதென்றால் வங்கிகளில் பொலிஸ் பாதுகாப்பு இருத்தல் வேண்டும் என்றும் அத்தகையநிலை இங்கு இல்லை என்றும் அத்துடன் ஆயுள் காப்புறுதி மட்டுமே தாம் இப்போது செய்து வருவதாகவும் காப்புறுதிக் கூட்டுத்தாபன அதிகாரிகள் கூறுகின்றனர்.

### தேவைக்குப் போதவில்லை:-

கடந்த வார இறுதியில் இங்கு எடுத்துவரப்பட்ட பணம் தமது தேவைக்குப் போதுமானதாக இல்லை என்று இரு வங்கிகளதும் உயர் அதிகாரிகள் கூறுகின்றனர். இலங்கை வங்கிக்கு 7.3 மில்லியன் ரூபாவும், மக்கள் வங்கிக்கு 0.7 மில்லியன் ரூபாவுமே எடுத்துவரப்பட்டது. இதனால் இவ் வங்கிகள் மட்டுப்படுத்தப்பட்ட சேவைகளையே வழங்க வேண்டிய நிலை தோன்றி உள்ளது.

### களஞ்சியமே காரணம்:-

சிறிது காலம் சீராக இருந்த பணச் சுற்றோட்டம் திடீரென நெருக்கடிக்கு உள்ளாகியதற்கு காரணம் என்ன என்று வினவிய போது அத்தியாவசியப் பொருள்களின் களஞ்சியப் படுத்தலே நெருக்கடி ஏற்பட்டமைக்கு பிரதான காரணம் என்று சில வங்கி அதிகாரிகள் கருத்துத் தெரிவித்தனர். (க)

# உடுகம்பொலவின் அறிக்கை நீதிமன்- அவமதிக்கவில்லை

## வழக்கறிஞர் பற்றி வீரக்கோன்

(கொழும்பு)

பிரதிப் பொலிஸ்மா அதிபர் பிரேமதாஸா உடுகம்பொல பத்திரிகைகளுக்கு விடுத்த அறிக்கை இம்மியளவுதானும் நீதிமன்றத்தை அவமதிக்கவில்லை என்று மூத்த வழக்கறிஞர்பற்றி வீரக்கோன் லங்கா சமசமாசக் கட்சித் தலைவர் பேனார்ட் சொய்சாவுக்குத் தெரியப்படுத்தியுள்ளார். வழக்கறிஞரின் இந்த அறிக்கையை பேனார்ட் சொய்சா செய்தியாளர் மாநாட்டில் வெளியிட்டார்.

லியனாராச்சி கொலை தொடர்பாக 6ஆம் திகதியன்று தம்மைச் சந்தித்தமாறு பிரேமதாஸா உடுகம்பொலவைக் குற்றப் புலனாய்வுப் பிரிவு கேட்டிருந்தது இது சம்பந்தமாக பத்திரிகை அறிக்கை வெளியிடுவது குறித்து உடுகம்பொல என்னுடன் சட்டவாலோசனை கலந்தார். அறிக்கையில் தரப்பட்டிருக்கும் தகவல்கள் அவரின் சொந்த விருப்புதலின் பெயரிலேயே வெளியிடப்பட்டுள்ளன என்பதை நான் பிரதமந்திரிக்கு ஊர்ஜிதம் செய்ய விரும்புகிறேன். அந்த அறிக்கையில் நீதிமன்றத்தை அவமதிக்கும் வகையில் எதுவுமில்லை. பொலிசாரினால் விசாரணைக்காகத் தேடப்படும் ஒருவரைப்பொலிசார் முன் ஆஜராக வேண்டாம் என எந்தச் சட்டத்தரணியும் ஆலோசனை வழங்க முடியாது; வழங்கவுமில்லை.

லியனாராய்ச்சி வழக்கில் உடுகம்பொலவுக்கு எதிராகக் கொலைக்குற்றம் சாட்டப்பட்டுள்ளது. குற்றம் சாட்டப்பட்டவர் இந்த வழக்கில் நீதிமன்றத்தில் ஆஜரானால் அவரைப் பிணையில் விடுவிக்க நீதிபதிக்கு அதிகாரம் இல்லை விளக்க மறியலில் வைக்கப்பட்டால் இவர் உயிருடன் திரும்பி வருவாரா என்பதில் எனக்குச் சந்தேகம்.

### டென்சில்

கட்டளை பிறப்பிக்கப்பட வேண்டும் அல்லது கூடி முடிவு எடுக்க அதிகாரமில்லை என்று முப்படைத் தளபதிகள் கருதினார்கள். கூட்டுப்படை நடவடிக்கைத் தலைமைச் செயலகம் பிரமாணங்களின்படி இயங்கிவரும் என்றார்.

ஜனாதிபதியினால் மேற்கொள்ளப்படும் முடிவுகள் பொது நடவடிக்கை அதிகாரியினால் நடைமுறைப்படுத்தப்படும். கூட்டுப்படைநடவடிக்கைத் தலைமைக்கு இதுபற்றிய தகவல் மாத்திரம் வழங்கப்படும் என்றும்-

கேந்திரமுக்கியத்துவம் வாய்ந்த முடிவுகள் முப்படைத்தளபதிகளால் மேற்கொள்ளப்படும். முடிவுகள் மாத்திரம் கூட்டுப்படை நடவடிக்கைத் தலைமைச் செயலகத்திற்கு

### தற்காலிக எழுது வினைஞர்

# மற்றுமொரு பெயர்பட்டியல் விரைவில் வெளிவரும்

(யாழ்ப்பாணம்)

தற்காலிக எழுதுவினைஞர் பதவிக்கான போட்டிப் பரீட்சையில் தெரிவு செய்யப்பட்டவர்களது மற்றுமொரு பெயர்ப் பட்டியல் விரைவில் வெளிவர இருக்கின்றது.

புள்ளி அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட சுமார் இருநூறிற்கு மேற்பட்டவர்களது பெயர்ப்பட்டியல் ஒன்று இன்னும் சில தினங்களில் வெளிவரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இவர்களது பட்டியல் பரீட்சைத்திணைக்களத்தால் வடக்கு கிழக்கு மாகாண சபைச்செயலகத்துக்குஅனுப்பி வைக்கப்பட்டிருப்பதாக கொழும்பில் இருந்து இறுதியாகக் கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன. இப்பட்டியல் அங்கிருந்து யாழ் அரசாங்க அதிபருக்கு மிகவிரைவில் அனுப்பி வைக்கப்பட இருக்கிறது (க)

## கிளிநொச்சி மாவட்

பால்மா வகைகள், பிஸ்கட் வகைகள்,

குளிர்பான எசன்ஸ் வகைகள்,

'கேக்' தயாரிப்பதற்கான பொருள்கள்

அனைத்தையும் ஒரே இடத்தில் நிதான விலையில்

பெற்றுக்கொள்ள நாடுங்கள்

**காமதேனு**

**வர்த்தக நிலையம்**

இல.140, மருத்துவமனை வீதி

நவீனசந்தை - யாழ்ப்பாணம்

(சி-4256)

மக்களுக்கு எதிரானவையோ ஜனநாயகத்துக்கு எதிரானவையோ அல்லது உடும்பொல போல் இன்னும் ஒருவர் வெளியேறினால்தான் உண்மை தெரியும் என்று கோமவன்ச அமரசிங்க மேலும் தெரிவித்தார்.

## தென் தமிழீழ

...தினர் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டுள்ளனர். இப்பகுதிகள் சுற்றிவளைக்கப்பட்டு பெரும் தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை திருக்கோணமலை காட்டுப்பகுதிகளில் சிறிலங்கா இராணுவத்தினர் ஊடுருவ முயன்று வருகின்றனர். விடுதலைப் புலிகளின் உறுதியான தாக்குதலினால் இந்த முயற்சிகள் தடுக்கப்பட்டு வருகின்றன.

## கைதானோர்

...கப்பட்டிருப்பவர்களது பெயர்ப்பட்டியலைத் தயாரிக்கும்படி மேற்படி அலுவலக அதிகாரிகளால் சிறைச்சாலைத் திணைக்களத்திற்கு பணிப்புரை வழங்கப்பட்டது.

இதனால் மிக விரைவில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழர்களது பெயர்ப்பட்டியல் ஒன்று யாழ். அரசாங்க அதிபருக்குக் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அத்துடன் வவுனியா மாவட்டத்திலும் திருகோணமலை மாவட்டத்திலும் தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்களது பெயர்ப்பட்டியலையும் தருமாறு யாழ். அரசாங்க அதிபர் கோரிக்கை விடுத்திருக்கிறார்.

அதேவேளை மேற்படி பட்டியலை உடன் அனுப்பி வைக்கும்படி கோரும் விசேட கடிதம் ஒன்று யாழ். அரசாங்க அதிபரால் நேற்று முன்தினம் அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது ஆனால் இவர்களது விடுதலை தொடர்பாக இது வரை எந்த முடிவும் எடுக்கப்படவில்லை. (க,பா)

### கிளிநொச்சி மாவட்ட

# முறைசாரா பாடநெறிகள் மே முதல் ஆரம்பம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட கல்வித் திணைக்களத்தின் 1992ம் ஆண்டுக்கான முறைசாரா கல்விப்பாட நெறிகள் 01.05.92 முதல் ஆரம்பமாகவுள்ளன.

பாடநெறிகளான விவசாய தொழில் நுட்பம், உருத்திரபுரம் ம.வி, கனகாம்பிகைகுளம் அ.த.க.பா ஆகியவற்றிலும், உணவு தயாரிப்பும் பாதுகாப்பும் புனிதபற்றிமா றோ.க.வி, புனித திரேசா ம.ம.வி, கனகபுரம் அ.த.க.பா. ஆகியவற்றிலும் உடை தயாரித்தல் புனித திரேசா ம.ம.வி புனிதபற்றிமா றோ.க.வி. முழங்காவில் ம.வி ஆகியவற்றிலும்; மரத்தளபாடம் செய்தல் அக்கராயன் ம.வி இலும், சுருக்கெழுத்து தட்டச்சுப் பயிற்சி பளை ம.வியிலும் நடைபெறும். அனுமதிகளுக்குப் பாடசாலை அதிபர்களிடம் தொடர்பு கொள்ளவும்.

## ராணுவ

...தும் கவலையும், குழப்பமும் அடைந்துள்ளதாகத் தெரிய வருகின்றது.

இராணுவத்திற்கிடையில் எழுந்துள்ள அதிகாரப் போட்டியும், புலிகளுக்கு எதிரான போர் முறைத் திட்டத்திலான முரண்பாடும், வடக்கு கிழக்கில் புலிகளுக்கு எதிரான யுத்தத்தைப் பாதிக்குமாகையினால் சிறிலங்கா அரசாங்கம் இனப் பிரச்சினைக்கான இராணுவ தீர்விலீனஅணுகுமுறை சிக்கலான கட்டத்தை அடைந்துள்ளது

மேலும் இருஉயர் இராணுவ அதிகாரிகளுக்கு இடையில் முரண்பாடு தீவிரமாக உள்ளமையில், ஒருவரையும் பாதிக்காத அளவில் முடிவெடுக்க வேண்டிய நிலை தோன்றியுள்ளது. அவ்வாறு இல்லாமல் யார் ஒருவராவது பாதிக்கப்படினும் அரசாங்கத்திற்கும் இராணுவத்தின் ஒரு பகுதியினருக்கும் இடையில், முரண்பாடு வளர்வது தவிர்க்க முடியாதது என்பதும் அரசாங்கத்திற்குத் தெரியுமாகையினால், அரசாங்கம் இது குறித்து மிகுந்த கவலை கொண்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

## பலர் செவிடாகி உள்ளனராம்

அம்பாறையில் கடந்த வெள்ளியன்று இடம் பெற்ற குண்டு வெடிப்பையடுத்து நூற்றுக்கணக்கானோர் செவிடாகி இருப்பதாக தெரிய வருகிறது. அம்பாறை பஸ் நிலையத்தில் ஏற்பட்ட குண்டு வெடிப்பு காரணமாக அச் சுற்றாடலில் வசிக்கும் பலருக்கும் காதுகள் செவிடாகி இருப்பதாகச் சொல்லப்படுகிறது இக் குண்டு வெடிப்புச் சத்தம் சுமார் பத்து மைல்களுக்கு அப்பாலுள்ள கிராமங்களுக்கும் கேட்டதாகவும் தெரிய வருகிறது.

## தமிழகக்

...கப்பல்களை ஆழம் குறைந்த கடல் பகுதியில் நிறுத்த முடியாதாகையால், தற்போது கடற்படையினர் சிறிய மீன்பிடிப் படகுகளையும், இழுவைப் படகுகளையும் வாடகைக்கு அமர்த்தி ரோந்துப் பணி செய்ய வேண்டியுள்ளது என்றார். விமானங்களின் ரோந்து பிரிவு கடற்படைக்கு உதவி வருவதாக மேலும் தெரிவித்தார்.

இந்திய மீனவர்களைப் பற்றிக் குறிப்பிடுகையில், இந்திய மீனவர்கள் எமதுஎல்லைக்குள் இருக்கும் வரை இந்தியக் கடற்படை அவர்களுக்கு பாதுகாப்பு அளிக்கும் என்றும் கூறினார்.

கூட்டுப்படை நடவடிக்கைத் தலைமைச் செயலகத்திற்கு அறிவிக்கப்பட்டு, அதுமூலமாக ஏனைய பிரிவுகளுக்குத் தெரியப்படுத்தப்படும் என்று பிரட்மன் வீரக்கோன் மேலும் தெரிவித்தார்.

கூட்டுப்படை நடவடிக்கைத் தலைமைச் செயலகம் ஒரு 'தபாற்பெட்டி' யாகவுள்ளதா என்று செய்தியாளர் இடைமறித்துக் கேட்டார்.

அமைச்சரவைப் பேச்சாளர் ரணில் விக்கிரமசிங்கா கருத்து தெரிவிக்கையில், இராணுவத் தளபதியின் கட்டுப்பாட்டின் கீழ் முன்னர் இருந்த இராணுவத்தைவிட அதிகமான படைகளுக்கு ஜெனரல் கொப்பேகடுவ தளபதியாக இருக்கிறார் என்பதில்லை. எங்களுடைய படை ஒரு சிறிய படை. ஒரு படைப் பிரிவைமாத்திரம் கூட்டுப்படை நடவடிக்கைத் தலைமைச் செயலகம் வழி நடத்திய காலமும் உண்டு. படைகளின் எண்ணிக்கை அதிகமானதும் நிலைமை வேறு மாதிரியாக மாறியுள்ளது இராணுவ அமைப்பில் மாற்றம் பற்றி நாம் நீண்ட காலமாக ஆலோசித்து வந்தோம். மாற்றங்கள் நடைபெறுகின்றன. முப்படைத்தளபதிகளையும், பொலிஸ்மா அதிபரையும் திட்டமிடுவதில் சம்பந்தப்படுத்தியுள்ளோம் என்றார்.

முன்பு ஒரு விளைவுக்குத் தான் பொறுப்பேற்க முடியாது என்று முப்படைகளின் தளபதி கூறலாம். பொறுப்பைக் கூட்டுப்படை நடவடிக்கைத் தலைமைச் செயலகத்தின்மேல் சுமத்திவிடலாம். இப்போது முப்படைத் தளபதிகள் பொறுப்பைத் தட்டிக் கழிக்க முடியாது என்றும்,

கூட்டுப்படை நடவடிக்கைத் தலைமைச் செயலகம் அப்படியே இருந்தபடி இருந்து வழங்கப்படும் கட்டளைகளை நிறைவேற்றும். முப்படைத் தளபதிகளும், பொலிஸ் மா அதிபரும் விளைவுகளுக்குப் பொறுப்பாக இருப்பர். முப்படைகளின் தளபதியாக ஜனாதிபதி இருப்பார் என்றும் ரணில் விக்கிரமசிங்கா தெரிவித்தார்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள, 'ஈழநாதம்' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 13 ஆம்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.